## வடமேல் மகாண சபை - 2019

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

------------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---------------------------------------

வட மேல் மாகாண சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2020 ஆகஸ்ட் 21 ஆந் திகதி வெளியிடப்பட்டதுடன், தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 27 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10(1) உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வடமேல் மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் மாகாண திறைசேரி உள்ளடங்களான அந்தந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மத்திய மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது

எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தன.

(ஆ) 2019 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2007 முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கிரிஉல்ல வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெற்றிருந்த நிதி முறைகேடுகளுக்குரிய அறவீடுகள் நிச்சயமற்ற காணப்படும் ரூபா | நிதி முறைகேடுகள் தொடர்பான தரப்பினரிடமிருந்து ரூபா 13,609,655 ஆன பெறுமதியை அறவடுதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018.05.22 ஆம் திகதிய எண் 18/வெவ்/(019) ஆம் இலக்க அமைச்சரவைக் கூட்டத்தின் போது இரண்டு அரச நிறுவனங்களுக்கிடையில் எழும் மோதல்கள் சட்ட நடவடிக்கை எடுக்காமல் பேச்சுவார்த்தை மற்றும் சமரச நடைமுறைகள் மூலம் தீர்க்கப்பட வேண்டும் என்று தீர்வு |

| | | | |
|---|---|---|---|
| | 13,609,655 தொகைக்காக எவ்வித நட்டஈடு (impairment) சீராக்கம் செய்யப்படாமல் காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் கீழ் மாகாண திறைசேரி வைப்புக்கள் (சேதங்கள்) என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | செய்யப்பட்டது. மேற்படி விடயம் காரணமாக இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது என்று சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது. மேலும் மக்கள் வங்கி மீது இழப்பீட்டு வழக்கு பதிவு செய்யுமாறும் சாட்சியங்களை வழங்க குற்றப்புலனாய்வு திணைக்களம் முன் வரும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஆ) | பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க காசு மற்றும் காசுக்கு சமமான கருதுவதற்கு அது கையேற்கப்பட்ட திகதியிலிருந்து 03 மாதங்கள் அல்லது அதற்கு குறைந்த காலமான குறுகிய முதிர்ச்சி காலமொன்று காணப்படும் முதலீடு மாத்திரமாக இருந்த போதும் 01 ஆண்டு கால எல்லைக்காக முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,251,338,792 பெறுமதியான நிலையான வைப்புக்கள் மற்றும் 06 மாத காலப்பகுதிக்காக முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா | 03 மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதிக் காக மேற்கொள்ளப் படும் முதலீடொன்று நடைமுறை சொத்துக்களின் வேறாக காண்பிக்கப்பட வேண்டும். | மிகை நிதி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கணக்கு நடவடிக்கைகளின் சொத்துகளுக்கான பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியம், குறுங்கால பொறுப்புக்களை தீர்வுசெய்வதற்கு முடியுமான வகையில் திறைசேரி முறிகளிலும் நிலையான வைப்புக்களிலும் முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன் முதிர்ச்சியடையும் போது கிடைக்கும் வட்டி மீண்டும் முதலீடு செய்யப்படும் வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம்முதலீடு தேவையான எந்தவொர சந்தர்ப்பததிலும் பணமாக்குவதற்கு எதிர்பார்ப்பதால் குறுங்கால முதலீடுகளாக நடைமுறைச் சொத்துக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| | 825,270,111 பெறுமதியான திறைசேரி வைப்புக்களாக மொத்தம் ரூபா 2,076,608,903 தொகை நிதி நிலைமைக்கூற்றில் காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்கு ஒத்ததாக காசுப்பாய்ச்சல் கூற்றிலும் காசு மற்றும் காசுக்கு சமமான வற்றின் கீழ் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் காசு மற்றும் காசுக்கு சமமானவை அதே பெறுமதியால் அதிகரித்திருந்தது. | | |
| (இ) | மூலதன சொத்துக்கள் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் என்பவற்றிற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 1,933,532,550 ஆன எவ்வித பகுப்பாய்வு ஒன்றில்லாமல் செயலாற்றல் கூற்றில் மாகாண முதலீட்டு செலவினமொன்றாக பதிவிழிக்கப்பட்டிருந்தது. | மூலதன சொத்துக்கள் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் என்பவற்றிற்காக செலவிடப்பட்டிருந்த செலவினம் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டும். | பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரகாரம் மூலதனச் சொத்துக்களை கையேற்றல் மாத்திரம் நடைமுறையல்லாத சொத்துக்களாக வகைப்படுத்தப்படுவதுடன் மூலதனச் சொத்துக்கள் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தலின் கீழ் வரும் செலவினம் சொத்துக்களின் பெறுமதியை பராமரிப்பதற்காக செலவிடப்பட்ட செலவினமாக கருதப்பட்டுள்ளது. அச்செலவினம் உட்பட ஏனைய மூலதனச் செலவினம் மாகாண முதலீட்டுச் செலவினமாக நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மானகாண சபையின் 2019 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 227,076,112 ஆன பெறுமதியுடனான இனங்காணப்படாத சொத்துக்கள் மீளாய்வாண்டில் முன்னய ஆண்டுக்குரிய சீராக்கம் செய்து பதிவழிக்கப்பட்டிருந்த போதும் அதற்குரிய உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | இனங்காணப்படாத சொத்துக்களின் பெறுமதி, முறையாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், பதிவழிப்பதற்கு உரிய முறையன நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். | சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் வரும் ஆரம்ப மீதியொன்றாக கையேற்றல் மற்றும் அகற்றுதல் ஒப்பிடப்பட்டு இறுதி மீதி கணக்கிடப்பட்டு திறைசேரி மீதிகளுக்கு 2018 ஆம் ஆண்டில் முனகொண்டு வரப்பட்ட ரூபா 618,133,006 ஆன மீதியொன்று சீராக்கப்பட்டதுடன் இம்மதியில் பதிவழிக்கப்பட்ட ரூபா 227,076,112 ஆன மீதியும் உள்ளக்கப்பட்டுள்ளது. |

## 1.7. இணக்கமின்மை

--------------------

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மாநகர சபை கட்டளைச் சட்டம் | | | |
| | 317 ஆம் பிரிவு | உள்ளூராட்சி மன்ற ஆணையாளரினால் குருணாகல் மாநகர சபையின் நடவடிக்கைகள் தொடர்பாக பரிசோதனை மேற் கொள்ளப்பட்டு அது தொடர்பான அறிக்கை நகர பிதாவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இதுவரை அவ்வாறான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படாததுடன் எதிர்காலத்தில் அதனை மேற்கொள்வதற்காக வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருவதாக தயவுடன் அறிய தருகின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வில்லை. | | |
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | மீளாய்வாண்டின் இறுதியில் மாகாண சபைக்குரிய அமைச்சொன்று, 9 திணைக்களங்கள் உட்பட 10 நிறுவனங்களில் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 132,653,269 பெறுமதியான பொது வைப்புக்கள் தீர்வு செய்யப்பட்டிருக்க வில்லை. | காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நி.பி 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | (i) செயற்திட்டங்களில் நடவடிக்கை பூர்த்தி செய்யப்படாதால் இறுதி தீர்மானம் எடுக்கும் வரை தடுத்து வைக்கப்பட்டுள்ளது.<br>(ii) பொது வைப்புக் கணக்கில் உள்ள காலாவதியான மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் தற்போது அம் மீதிகள் தீர்வு செய்யப்பட்டு வருவதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். |
| **(இ)** | **திறைசேரி சுற்றறிக்கை** | | | |
| | நிதி அமைச்சின் 2019 யூன் 17 ஆந் திகதிய 04/2019 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் (v) ஆம் பந்தி | உள்நாட்டு நிதியத்தை பயன்படுத்தி வெளிநாட்டு கல்வி சுற்றுலா பிரயாணங்கள் இடை நிறுத்தப்பட்டிருந்த போதும் பிரதான அமைச்சின் 6 உத்தியோகத்தர்கள் வெளிநாடு செல்வதற்காக ரூபா 1,367,267 தொகை செலவிடப்பட்டிருந்தது. | அவ்வப்போது அரசினால் அரசின் நிதியை பாதுகாப்பதற்காக விநியோகிக்கப்படும் சுற்றறிக்கை தொடர்பாக உள்ளூராட்சி மன்ற நிறுவனத் தலைவர்கள் விசேட கவனம் செலுத்த வேண்டும் | நிதி அமைச்சின் 2019.06.17 ஆந் திகதிய பாதீட்டுச் சுற்றறிக்கை இல. 4/2019 (v) மூலம் உள்நாட்டு நிதிகளைப் பயன்படுத்தி ஒழுங்கு செய்யப்பட்ட வெளிநாட்டு கல்விச் சுற்றுலாக்களை இடை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் சீன அரசினால் ஒழுங்கு செய்யப்பட்ட வெளிநாட்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | வளத் திணைக்களத்தினால் தெரிவ செய்யப்பட்டதன் பிரகாரம் வெளிநாடு சென்றிருந்தனர். ஏனைய உத்தியோகத்தரகள் இலங்கை இந்திய உயஸ்தானிகர் அலுவலகத்தினால் தெரிவு செய்யப்பட்டதன் படி வெளிநாடு சென்றதால் சுற்றுலாவிற்குரிய படிகள் கொடுப்பனவிற்கு நடவடிக்கை எடுத்ததாக அறிய தருகின்றேன். |
| **(இ)** | **பொது நிர்வாகச் சுற்றறிக்கை** | | | |
| (i) | ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துதல் தொடர்பாக 2018 பெப்ரவரி 20 ஆந் திகதய 03/2018 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஓய்வுபெற்று மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படும் காலஎல்லைக்குள் நிறுவனத்தின் தலைவர் பொருத்தமான பதிலாள் ஒருவரை இனங்காண வேண்டிய போதிலும் உள்ளூராட்சி மன்ற திணைக்களம் மற்றும் ஊவா மாகாண உள்ளூராட்சி மன்றத் திணைக்களத்தின் 09 நிறுவனங்களின் 04 பதவிகளுக்காக ஓய்வுபெற்ற அரசின் 13 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஓராண்டிற்கு மேற்பட்ட காலப்பகுதிக்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர். ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவர் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தும் போது அவர் | நிறுவன நோக்கங்களை நிறைவேற்று வதற்காக மனித வளங்களை முறையாக முகாமை செய்வதற்காக வெற்றிங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன் போதிலும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களன் செயற்பாடு மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை பேணிச் செல்வதற்காக அத்தியவசிய செயலாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், வருமான பரிசோதகர் மற்றும் வடிவமைப்பு வேலை அத்தியட்சகர் ஆகிய பதவிகளில் வெற்றிடங்கள் அதிகளவில் காணப்படுவதாகவும் இது தொடர்பாக அரசாங்க ஆணைக்குழு அவ்வப்போது அறிவித்தல்கள் மேற்கொள்ளப்படுவதுடன் வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படும் வரை கட்டாயமாக செய்ய வேண்டிய சேவைகளான நிறுவன நடவடிக்கைகள், அபிவிருத்தி செயற்திட்டங்களின் மேற்பார்வை செயற்பாடுகள் மற்றும் வருமான சேகரிப்பு செயற்பாடுகளுக்காக |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இறுதியாக பெற்றுக்கொண்ட சம்பளத்திற்கு சமமான படியொன்று கொடுப்பனவு செய்யப்பட முடியுமான போதிலும் ஓய்வுபெற்ற ாகாண இறைவரி ஆணையாளருக்கு 01 வருடம் 07 மாதங்கள் 15 நாட்களுக்கு அண்மித்த காலமாக மீண்டும் சேவையில் ஈடுபடுத்தும் போது செலுத்த வேண்டிய ரூபா 77,627 ஆன மாதாந்த படிகளுக்கு பதிலாக மாதாந்தம் ரூபா 160,684 வீதம் கொடுப்பனவு செய்த காரணத்தினால் சுற்றறிக்கை ஏற்பாடுகளை மிகைத்து கொடுப்பனவு செய்யப்பட்ட கூடுதலான கொடுப்பனவு ரூபா 1,619,610 ஆக இருந்தது. | | ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு இடம்பெற்றதாக அறிய தருகின்றேன். |
| (ii) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கையின் இலக்கம் 09/2009 இன் 02(1) | சபை செயலகத்தின் 10 பேருடன் கூடிய தலைவர் பதவியணி மற்றும் ஆளுனரின் பிரத்தியேக பதவியணியின் உத்தியோகத்தர்களின் வருகை, வெளியேறல் மற்றும் சேவையில் ஈடுபடுதல் உறுதிப்படுத்தப்படாமல் சம்பளம் மற்றும் படிகளாக | மாகாண சபையிடமிருந்து சம்பளம் பெறும் அனைத்து பதவியணியினரின் வருகை மற்றும் வெளியேறல் உரிய சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். | கௌரவ ஆளுனரின் அறிவூட்டலின் பிரகாரம் அவர்களுக்காக வருகை பதிவேடொன்று மாத்திரம் பயன்படுத்தப்பட்டு கைவிரலடையாள இயந்திரம் அகற்றப்பட்டது. அதன் பொறுப்பு அலுவலகத்தின் கண்காணிப்பிற்கு மேலதிகமாக ஆளுனரின் தனிப்பட்ட செயலாளரின் கண்காணிப்பின் கீழ் மேற் |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் போது ரூபா 9,229,162 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | கொள்ளப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

**(உ) ஏனைய சுற்றறிக்கை**

| | | | |
|---|---|---|---|
| 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதிய பீ.எஸ்/சீஎஸ்ஏ//11-18 ஆம் இலக்க சனாதிபதி சுற்றறிக்கை | ஆளுனரின் சாரதிகளுக்கு மாத்திரம் 200 மணித்தியால மேலதி நேரம் அங்கீகரிக்கப் பட்டிருந்த போதும் அதற்கு இணங்காத வகையிலும் முறையான அங்கீகாரம் ஒன்று இல்லாமல் ஆளுனரின் தனிப்பட்ட பதவியணியின் 12 உத்தியோகத்தர்களுக் கு 2019 பெப்ரவரி முதல் நவம்பர் வரையான காலப்பகுதிக்காக மாதமொன்றுக்கு 200 மணித்தியாலங்கள் வீதம் ரூபா 2,025,120 ஆன மேலதிக படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மேலதிக படிகள் கொடுப்பனவிற்கு ரிய சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். | மாகாண சபை கலைக்கப்பட்டதன் பின்னர் அமைச்சுக்களின் கடமைகள் கௌரவ ஆளுனருக்கு கையளிக்கப்பட்டமையால் தனிப்பட்ட பதவியணிக்கும் மேலதிக செயற்பாடுகளில் ஈடுபடுவதற்காக நேர்ந்த காரணத்தினால் கௌரவ ஆளுனரினால் அந்த உத்தியோகத்தர்களுக்காக 200 மணித்தியாலங்கள் மேலதிக நேரப் படியொன்று செலுத்துமாறு கட்டளையிடப்பட்டது. தனிப்பட்ட செயலாளரின் கண்காணிப்பின் கீழ் பிரதான செயலாளரின் அங்கீகாரத்தின் பின்னர் கொடுப்பனவு செய்யப்பட்டது. |

## 2. வருமான நிர்வாகம்

-------------------------

## 2.1 பிரதான செயலாளரின் சேகரிக்கப்பட்ட வருமானம் (முத்திரைக் கட்டணங்கள் / நீதிமன்ற தண்டப்பணம்) உள்ளூராட்சிமன்றங்களுக்கு பகிர்ந்தளித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையால் உள்ளூராட்சி மன்றங்களுக்காக சேகரிக்கப்படும் முத்திரைக் கட்டணங்கள் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் என்பவற்றை குறித்த உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் அதிகாரப் பிரதேசத்தின் அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் சமூக சேவைகளை நிறைவேற்றுவதற்காக அந்நிறுவனங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் வடமேல் மாகாண சபையால் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணங்கள் மற்றும் நீதிமன்ற தண்டப்பணமாக சேகரிக்கப்பட்ட முறையே 313,031,038 மற்றும் ரூபா 111,187,945 தொகை குறித்த உள்ளூராட்சிமன்ற நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கு உரித்தாக வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணத்தை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது உள்ளூராட்சி மன்றங்களின் கொடுப்பனவு கௌரவ ஆளுனர் அவர்களின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னராகும். 2019.12.31 இல் உள்ளவாறு எமக்கு உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட சகல த்தின் பேரில் இத்தொகையை மாகாண சபை செயற்பட்ட காலப்பகுதியில் குறித்த உள்ளூராட்சி மன்றங்களால் சகல பணக்கோரல் கடிதங்களுக்காக கொடுப்பனவு செய்து பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |

## 2.2 நிலுவை வருமானம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தலைமை செயலாளர் அலுவலகம், மாகாண வருமானத் திணைக்களம் மற்றும் காணி ஆணையாளர் திணைக்களம் என்பவற்றினால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 08 வருமானக் குறியீடுகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 232,866,539 கூட்டுத்தொகையான வருமானம் நிலுவையாக காணப்பட்டது. இதில் ரூபா 152,872,009 தொகை 3 ஆண்டுகளுக்கு பழையதாக இருந்தது. | நிலுவை வருமான அறவீடு செய்வதற்குரிய முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை |
| (ஆ) | மாகாண இறைவரித் திணைக்களத்தினால் 1991 முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய 784 கோவைகளிலிருந்து நிலுவையான ரூபா 116,981,289 தொகையான விற்பனை புரள்வு வரி 2011 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய 483 முத்திரைக் கட்டணங்கள் கோவைகளிலிருந்து நிலுவை குத்தகை வரி மற்றும் தண்டப்பணம் முறையே ரூபா 36,894,328 மற்றும் ரூபா 40,051,262 தொகை 2016 முதல் 2019 வரையான காலப்பகுதிக்குரிய நிலுவை | நிலுவை புரள்வு வரி அறவீடு செய்வதற்குரிய முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை வரியை அறவிடுவதற்காக வெவ்வேறு செயற்பாடுகள் பின்பற்றப்பட்டு கொடுப்பனவு தவிர்ப்புச் செய்யப்பட்டால் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. அவ்வாறு நடவடிக்கை எடுத்த பொது வியாபாரங்கள் மூடப்பட்டிருந்தமையாலும் வரி செலுத்துவோரை கண்டுபிடிப்பதற்கு சிரமமாக இருந்தமையால் வரி விலக்களிப்பிற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

மேலதிக முத்திரைக் கட்டணங்கள் ரூபா 76,945,590 அறவீடுகள் பதிவழிக்கப்பட்டமை காரணமாக மாகாண சபை நிதியத்திற்கு இழக்கப்பபட்ட வருமானம் ரூபா 193,926,879 ஆக இருந்தது.

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக மாகாண சபை நிதியத்தின் ரூபா 1,026,749,479 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதனோடெத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 274,433,543 ஆக இருந்தமையால் முன்னய ஆண்டிற்கு ஒப்பாக நடப்பாண்டின் பற்றாக்குறை ரூபா 752,315,936 ஆல் 274 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

**4 நியதிச்சட்ட கணக்குகள்/ நிதியக்கணக்குகள்/ வணிக முற்பணக் கணக்குகள் மற்றும் ஏனைய முற்பணக் கணக்குகள்**

**4.1 நியதிச்சட்டக் கணக்குகள் / நிதியக் கணக்குகள்**

**(அ) வயம்ப முன்பருவ கல்வி அபிவிருத்தி அதிகாரசபை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | குருணாகல் மக்கள் வங்கியில் பேணிச்செல்லப்படும் நடைமுறைக் கணக்கொன்று 2018 ஆகஸ்ட் 10 ஆந் திகதி ரூபா 880,000 இல் ஆரம்பிக்கப்பட்டு 2019 நவம்பர் 30 ஆந் திகதி வரை ரூபா 3,132,160 | மிகை நிதியத்தை பொருத்தமான முதலீடொன்றில் ஈடுபடுத்த வேண்டும். | நிதியத்தை மேலும் பலப்படுத்துவதற்கு வருடாந்தம் சேகரிக்கும் பணத்தை கணக்கில் வைத்துக்கொண்டு எஞ்சிய பணத்தை நிலையான |

| | | | |
|---|---|---|---|
| | தொயையான மீதியினைக் கொண்டிருந்தது. இக்கணக்கின் செயற்பாட்டு நடவடிக்கை இடமபெறாமையால் விளைவற்ற வகையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த அப்பணம் அதிகாரசபையின் நிதியத்தை பலத்தை அதிகரித்துக் கொள்வதற்காக பொருத்தமான முதலீடொன்றில் ஈடுபடுத்துவதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | | வைப்புக்களில் முதலீடொன்றில் ஈடுபடுத்த எதிர்பார்த்துள்ளேன். |
| (ii) | 2011 செப்தம்பர் 29 ஆந் திகதி முதல் 2019 நவம்பர் 30 ஆந் திகதி வரை அதிகாரசபைக்கு கிடைத்திருந்த ரூபா 22,300,000 ஆன மிகை பணம் 15 நிலையான வைப்புச் சான்றிதழ்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 10 வைப்புச் சான்றிதழ்களின் கூட்டுப்பெறுமதியான ரூபா 13,900,000 தொகை மீளாய்வாண்டில் முதிர்ச்சியடைந்ததால் கிடைத்த ரூபா 1,350,905 தொகையான வட்டி வருமானம் அதிகாரசபையின் பொது நடைமுறைக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்த போதும் அதில் சிக்கனத்தன்மையொன்று அவதானிக்கப்படவில்லை. | நிறுவகத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அதிகாரசபையின் செலவினத்ததை மேவுகை செய்யும் வகையில் நிலையான சொத்துக்கள் காலாவதியாகும் போது கிடைக்கும் வட்டி வருமானத்தை அதிகார சபையின் பொது நடைமுறைக் கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | 2003 இன் 04 ஆம் இலக்க வயம்ப முன்பள்ளிப் பருவ கல்வி அபிவிருத்தி அதிகாரசபை சாசனத்தின் I ஆம் பகுதியின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் நோக்கங்கள் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டின் வடமேல் மாகாணத்தில் தாபிக்கப்பட்டுள்ள 131 அரச முன்பள்ளி பாடசாலைகள் மற்றும் 2,149 தனியார் முன்பள்ளி பாடசாலைகள் என மொத்தம் 2,280 பாடசாலைகள் தாபிக்கப்பட்டிருந்தது. அதில் 15 அரசின் | முன்பள்ளிப் பருவ கல்வி அபிவிருத்தி அதிகார சபையின் சாசனத்தின் கீழ் பாடசாலைகளை பதிவும் சாசன ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முன்னைய அதிகாரசபையின் நியதிச்சட்டத்தின் (2)4 ஆம் பிரிவின் கீழ் முன்பள்ளி பாடசாலையொன்று பூர்த்தி செய்யப்பட வேண்டிய ஆகக் குறைந்த நியமங்களை பூர்த்தி செய்வதற்கு முன்பள்ளி காப்பாளர் நடவடிக்கை எடுக்காமை இந்நிலைமைக்கு |

| | | | |
|---|---|---|---|
| | முன்பள்ளி பாடசாலைகளும் 267 தனியார் முன்பள்ளி பாடசாலைகளுமாக 282 முன்பள்ளி பாடசாலைகள் மேற்படி சாசனத்தின் 04(2) ஆம் பிரிவின் பிரகாரம் பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. எவ்வாறாயினம் முன்னனைய ஆண்டில் பதிவு செய்யப்படாத 903 ஆன மொத்த பாடசாலைகளில் 759 இற்கு தற்காலிக பதிவுகள் வழங்கப்பட்டிருந்தன. | | காரணமாக இருந்தது. மேலும் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் மூலம் கட்டணங்கள் அறவிடப்படும் முன்பள்ளி பாடசாலைகளின் காப்பாளரின் தொழில் தகைமைகளில் குறைபாடுகள் காணப்பட்டமை இதற்கு காரணமாக இருந்தன. |

**(ஆ) வடமேல் மனிதவள அபிவிருத்தி அதிகாரசபை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | அதிகாரசபையினால் சுத்திகரிப்பு சேவைகள் மற்றும் பாதுகாப்பு சேவைகள் வழங்கும் போது உடன்படிக்கை செய்யப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை வழங்குவதற்கு அதிகாரசபைக்கு முடியாது போனால் அவ்வாறு வழங்கப்படாத ஊழியர் ஒருவரின் நாள் சம்பளம் தண்டப்பணமாக அறவிடப்பட வேண்டியதுடன் 2019 ஆம் ஆண்டில் அவ்வாறு தண்டப்பணமாக நிறுவனங்களுக்கு செலுத்திய தொகை ரூபா 6,031,342 ஆக இருந்தது. அதன் பிரகாரம் குறித்த சேவை முறையாக மேற்கொள்ளப்படவில்லையென அவதானிக்கப்பட்டது. | உடன்படிக்கை செய்யப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை வழங்குவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உடன்படிக்கை செய்யப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை வழங்குவதற்கு தேவையின் பிரகாரம் ஊழியர் முகாமைத்துவம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது எனினும் எமது கட்டுப்பாட்டிற்கு அப்பால்வரும் அவசர நிலைமைகளில் ஊழியர் வருகை குறைவாகும். அவ்வாறே எவரேனும் ஊழியர் ஒருவர் அறிவிக்காமல் சேவைக்கு வராவிட்டால் அந்த ஊழியரின் நாளாந்த சம்பளம் அதிகார சபையினால் மிகை அறவீடு செய்யப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிறுவகத்தினால் 08 கணக்குகள் பேணிச் செல்லப்படுவதுடன் அக்கணக்குகளுக்கு இடையே முறையான நிதி முகாமைத்துவம் இடம்பெறாமை காரணமாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு கணக்கில் ரூபா 18,221,055 ஆன வங்கி மேலதிகப் பற்றொன்று காணப்பட்டது. நிறுவகத்திற்குச் சொந்தமான தேறிய பண மீதி ரூபா 31,502,792 ஆக இருந்த போதிலும் வங்கி மேலதிக பற்று மற்றும் அதிகளவில் வங்கிக் கணக்குகளை பேணிச் செல்வதால் வங்கிக் கட்டணங்களாக ரூபா 1,355,909 தொகை நிறுவனத்திற்கு செலவிட நேர்ந்தது. | வங்கிக் கணக்குகளை பேணிச்செல்லும் போது நிதிக்கிரயம் குறைவாக இருக்கும் வகையில் நிதி முகாமை செய்யப்பட வேண்டும். | பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்பு பிரிவில் சம்பளக் கொடுப்பன விற்காக பயன்படுத்தப் படும் கணக்கில் பாதுகாப்பு மற்றும் சுத்திகரப்பு பிரிவின் சம்பளக் கொடுப்பன விற்காக மாதமொன்றுக்கு ரூபா 30.5 மில்லியன் அளவில் செலவாகின்றது. சேவைகள் வழங்கும் நிறுவனங்களிலிருந்து குறித்த பிரகாரம் பணம் கிடைக்கப் பெறாமையால் வங்கி மேலதிக பற்று எடுக்காமல் கொடுப்பனவு செய்வது நடைமுறைச் சாத்தியமில்லாமையால் வங்கி மேலதிக பற்றொான்று காணப்படுகின்றது. |
| (iii) | வடமேல் மனிதவள அபிவிருத்தி அதிகாரசபையால் வழங்கப்படும் சுழற்சி நிதிய கடன்களிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக உள்ள 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் தவணை மற்றும் வட்டி ரூபா 12,194,029 ஆக இருந்தன. | நிலுவை கடனைஅறவீடு செய்வதற்குரிய முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கவில்லை. |

**(இ) கைத்தொழில் சேவைப் பணியகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 திசெம்பர் 16 ஆந் திகதிய 303 ஆம் இலக்க பதவிநிலை பத்திரத்தின் பிரகாரம் பணியகத்தின் ஒவ்வொரு பணிப்பொறுப்பிற்காக உழைத்த இலாபத்தில் 5 சதவீதம் நலன்புரி நிதியத்திற்கு கழிக்கப்பட்டு எஞ்சிய இலாபத்தில் 55 சதவீதம் பதவியணியினருக்காக ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு 2019 ஆம் ஆண்டில் ஊக்குவிப்பு படியாக ரூபா 4,813,222 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக எஞ்சிய 45 சதவீதத்தில் ரூபா 1,292,126 தொகை ஊழியர்கள் சேமித்த சுகயீன விடுமுறைக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | ஊக்குவிப்பு முன்மொழிவு முறைமை மற்றும் அதன் நியதிகளுக்காக முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | ஊக்குவிப்பு படிகள் கொடுப்பனவின் நோக்கம் பணியகத்தின் நிதி நிலைமையை உயர்ந்த மட்டத்தில் பேணிச் செல்வதற்காக வருமானங்களை உழைக்கும் செயற்பாடுகளை முன்னேற்றுதல் நிறுவகத்தின் ஊழியர்களின் விருப்பங்கள் தகைமையுடைய தொழில்நுட்ப இயலுமை உள்ள பதவியணியனரை நிறுவகத்தில் நீண்டகாலத்தில் தரித்து வைப்பதாகும். ஊக்குவிப்பொன்றாக சேமிக்கப்பட்ட மருத்துவ விடுமுறைக்காக 1990 ஆம் ஆண்டில் பணியகத்தின் பணிப்பாளர் சபையிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அங்கீகாரத்தின் பிரகாரம் 1991 ஆம் ஆண்டு முதல் கொடுப்பனவு செய்யப்படுகின்றது. ஊக்குவிப்புக் கொடுப்பனவு செயற்திட்டத்தை |

| | | | |
|---|---|---|---|
| | | | அடிப்படையாக கொண்டு கொடுப்பனவு செய்யப்படுகின்றதுடன் சேமித்த சுகயீன விடுமுறைக்காக கொடுப்பனவு செய்யப்படுவது வருகையை அடிப்படையாக கொண்டேயாகும். |

**(ஈ) வடமேல் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை**

---

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 571(2) இன் பிரகாரம் 02 ஆண்டு கால் கடந்த ரூபா 1,593,492 ஆன நிறுத்திவைத்தல் வைப்புக்களை விடுவிப்பதற்கு அல்லது அரசின் வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக 2020.01.28 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன் குறித்த நிறுத்தி வைக்கப்பட்ட தொகையை விடுவிப்பதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | முறையான சாத்தியவள ஆய்வொன்றில்லாமலும் திட்டமிடல் ஒன்றும் இல்லாமல் ரூபா 12,618,363 செலவிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட மதுரங்குளி சுற்றுலா தகவல் மற்றும் வசதிகள் நிலையம் 03 ஆண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதியொன்றில் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்காமல் விளைவற்றுக் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டில் இந்நிலையத்தின் | இச்சுற்றுலா தகவல் மற்றும் வசதிகள் நிலையத்தினை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது கட்டிடம் முதலீட்டாளர் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் குறித்த குத்தகைக்கு வழங்குதல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வரை இடத்திற்கு வழங்கியுள்ள மின்சார மற்றும் நீர் |

| | | | |
|---|---|---|---|
| | பராமரிப்பு செயற்பாடுகளுக்கு ரூபா 178,628 செலவிடப்பட்டிருந்தது. | | வசதிகளை வழங்கு வதற்கும் கட்டிடங்களை பாதுகாப்பதற்கு காவலாளி ஒருவரை ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்தமையால் இடப் பரிசோதனைக்கு ரூபா 178,304 தொகை செலவிடப்பட்டிருந்தது. |
| (iii) | படகமுவ சுற்றுலா வசதிகள் நிலையத்தில் நடாத்திச் செல்லப்படும் பிரதான உணவகம் உட்பட 13 கடைகளில் 12 கடைகளின் உடன்படிக்கை காலம் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்து 01 மாதங்கள் முதல் 07 மாதங்களுக்கு இடைப்பட்ட துடன் காலம் கடந்திருந்த போதும் அக்கடைகளை மீண்டும் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடைகளிலிருந்து வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக 2020.06.10 ஆந் திகதி கலந்துரையாடல் இடம் பெற்றிருந்ததுடன் தற்போது எஞ்சிய அனைத்துக் கடைகளையும் குத்தகைக்கு வழங்குவதற்காக பெறுகை செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |

## (உ) வடமேல் கூட்டுறவு அபிவிருத்தி நிதியம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | கூட்டுறவுச் சட்டத்திற்குரிய விதிக்கோவையின் 43(ii) விதியின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுறவு நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 54,828,713 ஆன நிலுவை பங்களிப்புத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | கூட்டுறவுச் சட்டத்தின் விதியின் பிரகாரம் நிலுவை பங்களிப்புத் தொகை அறவிடப்பட வேண்டும். | சங்கங்களின் தொழிற்படு மூலதனத்தை குறைத்து பங்களிப்பு தொகை கொடுப்பனவு செய்யப்படுவதுடன் தற்போது காணப்படும் கொரோனா தொற்று நிலைமையின் கீழும் கூட்டுறவுச் சங்கங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | | அதிகளவில் நிதி சிக்கல்களுக்கு உள்ளாகியுள்ளன. 2020.04.30 ஆந் திகதி வரையில் நிலுவை தொகையில் ரூபா 36,127,047 அறவிடப்பட்டுள்ளது. |
| (ii) | கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தினால் 37 கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்தொகை ரூபா 69,087,433 தொகை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் அறவிடுவதற்கு முறையான நடைமுறையொன்று செயற்படுத்தி இருக்கவில்லை. | கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 12 மாதங்களுக்கு குறைந்த கடன்களை நாளது வரையாக்குவதற்கும் முடியுமாக உள்ளதுடன் 12 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்த கடன்களை அறவிடுவதற்காக கூட்டுறவு நிதியக் குழுவின் ஆலோசணையின் பிரகாரம் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிய தருகின்றேன். |
| (iii) | 14 கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கியிருந்த ரூபா 33,194,700 ஆன கடன்தொகையில் ஒரு தவணையேனும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சங்க பங்களிப்புத் தொகையை முறைப்படி கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அதிகளவிலான சங்கங்கள் நிதிப் பிரச்சினைகளுக்கு உள்ளாகியுள்ளன. இச்சங்களுக்கு காணப்படும் நிதிச் சிக்கல்களிலிருந்து மீளுவதற்கும் ஊழியர் சமூகத்தின் தொழிலைப் பாதுகாக்கும் நோக்கிலாகும். இச்சங்கங்களின் நிதி பலவீனங்களை குறைப்பதற்காக மேலும் செயற்படுத்தி வருவதாக தயவுடன் அறிய தருகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | கூட்டுறவு நிதியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு முரணாக திணைக்கள அலுவலக உபகரணங்களுக்காகவும் திணைக்கள கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காகவும் மீளாய்வாண்டில் ரூபா 12,002,797 ஆன செலவினமொன்று ஏற்பட்டிருந்தது. | கூட்டுறவு நிதியத்தின் எதிர்பார்த்த செயற்பாடு களுக்காக மாத்திரம் நிதியம் ஈடுடுத்தப்பட வேண்டும். | நிதியத்தின் செயற்பாடுகளை முறையாக முகாமை செய்வதற்காக தேவைப்பாடு உள்ளதால் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருக்க வில்லை. |

**(ஊ) வடமேல் மாகாண ஜனகலா மன்றம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | ஜனகலா மன்றத்தினால் 2019 ஆம் ஆண்டில் வடமேல் மாகாணத்திற்கு வெளியே வழங்குனரிடமிருந்து மீண்டும் விற்பனை செய்யும் நோக்கில் ரூபா 5,610,330 ஆன பொருள கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் காரணமாக வடமேல் மாகாண பாரம்பரிய கலை சிற்பிகளை பாதுகாத்தல், மேம்படுத்தல்கள் மற்றும் உள்நாட்டு கைத்தொழில்களை முன்னேற்றுதல் போன்ற வடமேல் மாகாண ஜனகலா மன்றத்தின் பிரதான நோக்கங்கள் நிறைவேற்றப்படாமல் இருந்ததுடன் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மொத்த பொருள் இருப்பின் பெறுமதியில் வடமேல் மாகாணத்தின் வழங்குனரிடமிருந்து 34 சதவீதமான பெறுமதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | பாரம்பரிய கலை சிற்பிகளை பாதுகாத்தல், மேம்படுத்தல்கள் என்பவற்றிற்காக சம்பிரதாயபூர்வ வடிவமைப்பாளர்களிடமிருந்து உற்பத்திகளை கொள்வனவு செய்வதற்காக முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் | விற்பனை நிலையத்திற்கு பொருட்களை வழங்கும் போது மிகவும் தரமான உற்பத்திப் பொருட்களை வழங்குவது இடம் பெறவேண்டியுள்ளதால் வடமேல் மாகாணத்தில் உற்பத்தி செய்யப்படாத கூடுதலான நுகர்வோரைக் கவரக்கூடிய உயர்தரத்திலான வடிவமைப்புக்களை ஏனைய தாகாணங்களிலிருந்து கொள்வனவு செய்வதற்கு நேர்ந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2019 ஆம் ஆண்டில் திட்டவட்ட மானியங்களின் கீழ் வடமேல் மாகாணத்தின் பாரம்பரிய ஜனகலா மேம்பாட்டிற்காக மாத்திரம் ரூபா 5 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக வடமேல் மாகாண ஜனகலா மன்றத்தின் 05(அ) மற்றும் 5(ஆ) பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் எதுவும் நிறைவேற்றாமல் நடனக் கலை மற்றும் கலை நிகழ்ச்சிகளை மாத்திரம் நடாத்துவதற்கு மேற்படி தொகையில் ரூபா 4,833,839 செலவிடப்பட்டிருந்தது. | நிறுவகத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுவதற்காக குறித்த திட்டங்களை தயாரித்து பக்கச்சார்பற்ற வகையில் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்று வதற்கு முடியுமான வகையில் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். | வடமேல் மாகாண ஜனகலா மன்றத்திற்கு வழங்கப்படும் அனைத்து பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களுக்காக பயிற்சி செயலமர்வொன்று உட்பட அவர்களின் பிரச்சினைகள் இனங்கண்டு அவர்களின் படைப்புக்கள் மற்றும் கைத்தொழில்களை முன்னேற்றுவதற்காக தேவையான ஆலோசணை சேவைகள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டதுடன் இந்த நிகழ்ச்சித்திட்டம் 2020 ஆண்டினுள் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தயவுடன் அறிய தருகின்றேன். |

**(எ) வடமேல் முதலமைச்சர் நிதியம்**

-----------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1990 இன் 02 ஆம் இலக்க வடமேல் மாகாண முதலமைச்சர் நிதியத்தின் சாசனத்தின் கீழ் 6 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியத்தின் பணம் வடமேல் மாகாணத்தினுள் வறுமையை ஒழிக்க நிவாரணம் வழங்க அல்லது கல்வி அறிவினை அதிகரிப்பதற்கு அல்லது சமய முன்னேற்றத்திற்கு சமய | நியதிச்சட்டத்தின் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கி நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு வளங்களை செயற்படுத்த வேண்டும். | சாசனத்தின் பிரகாரம் முதலமைச்சர் நிதியத்தின் நோக்கங்கள் கணக்காய்வினால் குறிப்பிடப்பட்ட நியதிகள் இருப்பதாக குறிப்பிடப்பிட விரும்புகிறேன் எவ்வாறாயினும், பெரிய |

| | | |
|---|---|---|
| அனுஷ்டானமொன்றை மேற்கொள்வதற்கு அல்லது ஈடுபடத்த வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் அதற்காக எவ்வித பணமும் முதலமைச்சர் நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருக்கவில்லை. | | அளவிலான சத்திர சிகிச்சை மற்றும் தொற்றாத நோய்களுக்கான சிகிச்சை வழங்கும் போது நிதி பற்றாக்குறையுள்ள மக்களுக்கு சலுகையொன்று வழங்குவதற்காக ஒரே நிதியம் பிரதான அமைச்சின் நிதியமாகும். அதற்காக முன்னுரிமை வழங்கப்படுவதுடன் ஏனைய வேண்டுகோள் கிடைத்தால் அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

**(ஏ) வடமேல் மாகாண சுற்றாடல் அதிகாரசபை**

---

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மாகாண சுற்றாடல் அதிகாரசபை பாரிய அளவிலான செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சுற்றாடல் தீர்வு சான்றிதழ் வழங்கல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்பார்வை சேவைக் கட்டணங்களுக்காக 63 நிறுவனங்களினால் வைப்புச் செய்யப்பட்டுள்ள ரூபா 7,650,842 தொகை பல களுக்காக செய்யும் | சேவை பெறும் நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொள்ளும் வப்புக்களுக்குரிய பரிசோதனை செயற்பாடுகள் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் பூர்த்தி செய்து கடன்கொடுத்தோர் வைப்பு மீதிகள் தீர்வு செய்யப்பட வேண்டும. | செலுத்த வேண்டிய வைப்பு மீதிகளாக பாரிளவிலான செயற்திட்டங்களை அங்கீகரிக்கும் நடைமுறையின் பிரகாரம் செயற்திட்டங்களை ஆரம்பிக்கும் போது செயற்திட்ட அளிப்பாளரால் இந்த அதிகாரசபைக்கு வைப்புச் செய்யப்பட்ட நிரந்தர தொகையாகும். இத்தொகை இச்செயற்திட்ட அங்கீகரிக்கும் செயற்பாட்டிற்காக அதிகாரசபையால் |

| | | |
|---|---|---|
| | | தேவையான சந்தர்ப்பங்களின் போது செலவிடப்படுகின்றது. இச்செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் பின்தொடர் நடவடிக்கைகள் அடிக்கடி மேற்கொள்ளப்படுவதால் இவ்வைப்புக்கள் கடன்கொடுத்தோர் மீதிகள் காணப்பட்டமை அநேகமாக இடம்பெறுகின்றது. |

**(ஐ) பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 1995 இன் 04 ஆம் இலக்க பயணிகள் போக்குவரத்து சேவை சாசனத்தின் 17(ஆ) பிரிவின் பிரகாரம் பயணிகள் போக்குவரத்திற்காக அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல், அந்த புதுப்பித்தல் அல்லது இரத்துச் செய்தல் மற்றும் கட்டணங்களை தீர்மானித்தல் என்பன அதிகாரசபையால் செய்யப்பட வேண்டும். அக்கட்டணங்கள் மற்றும் கட்டளைகள் தயாரிக்கப்பட்டு 2012 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரை பல சந்தர்ப்பங்களில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் சட்டமாக்கப்பட்ட போதும் அதன் பின்னர் பல சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட் கட்டண திருத்த வர்த்தமானியில் வெளியிடப்பட்டு சட்டரீதியாக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டண திருத்தங்கள் வர்த்தமானியில் வெளியிட்டு சட்டரதியாக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை . |

| | | | |
|---|---|---|---|
| (ii) | புதிய பயணிகள் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக உரிய ஆலோசணை பத்திரத்தின் 15 ஆம் நிபந்தனையின் பிரகாரம் கேள்வி வழங்கியதன் பின்னர் விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்ட கேள்வித் தொகையில் அரைப்பங்கு அத்திகதியில் விண்ணப்பதாரியால் செலுத்த வேண்டியதுடன் எஞ்சிய 14 நாட்களுக்குள் செலுத்தி பூர்த்தி செய்ய வேண்டும். எனினும் 2019 ஆகஸ்ட் 05 ஆந் திகதி மற்றும் நவம்பர் 25 ஆந் திகதிகளில் திறக்கப்பட்ட கூறு விலைகளின் போது 03 விண்ணப்பதாரிகளிடமிருந்து ரூபா 2,935,950 தொகை அறவிட வேண்டி இருக்கையில் போக்குவரத்து அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. | முழுத்தொகையையும் கொடுப்பனவு செய்து பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் பயணிகள் போக்குவரத்து அனுமதிப்பததிரங்கள் வழங்கப்பட வேண்டும். | இக்கூறுவிலை விண்ணப்பதாரிகளால் பேருந்து ஓட்டத்தின் போது எஞ்சிய கேள்விப்பணத்தை செலுத்துவதாக தலைவரிடம் கோரிக்கையொன்றை விடுத்துள்ளதுடன் அவ்வேண்டுகோளை கௌரவ பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பின்னர் இவ்வீதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. |

## 4.2 வர்த்தக முற்பணக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மூலப்பொருள் வழங்கல் உட்பட புடவைக் கைத்தொழில் நிலையங்களை பேணிச் செல்லும் வர்த்தக முற்பணக் கணக்கின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பட்டியல் கடன்பட்டோர் உட்பட மொத்த கடன்பட்டோர் மீதி ரூபா 28,495,880 தொகையாக இருந்ததுடன், அதில் 5-21 ஆண்டுகள் இடைப்பட்ட கூட்டு கடன்பட்டோர் பட்டியல் மீதி ரூபா 3,596,302 ஆகவும் 08 ஆண்டுகள் கடந்த | நீண்டகாலமாக அறவிடப்படாத கடன் மீதி தொடர்பாக மாகாண மற்றும் திறைசேரியின் ஆலோசணையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2009 இற்கு முன்னரான ஆண்டுகளின் கடன்களை அறவிடுவதற்கு ஆரம்ப தரவுகளுக்காக நியமிக்கப்பட்டிருந்த குழு அறிக்கையின் பிரகாரம் சில ஆண்டுகளில் கடன் மீதிகள் சரியாக இருக்க வேண்டும். 2009 இற்கு முன்னரான ஆண்டுகளின் |

| | | |
|---|---|---|
| மொத்தக் கடன்பட்டோர் பட்டியல் மீதி ரூபா ரூபா 6,726,643 ஆக இருந்தது. இந்நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்காக திணைக்களத்தினால் போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | நிலுவை கடன் மீதி தொடர்பான அறிக்கையொன்று பிரதான செயலாளருக்கு சமர்ப்பித்து ஆலோசணை பெற்றுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது. தற்போது நிலுவை கடன் மீதிகளாக மிகையாக கிடைத்த கடன் தொகையில் பழைய கடன்தொகையில் ஒரு பகுதியை ஈடுசெய்வதற்கு அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

## 4.3 ஏனைய முற்பணக் கணக்குகள்

---------------------------------------

**மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண சபையின் அமைச்சுக்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் உட்பட 40 நிறுவனங்களிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற, இறந்த, சேவையை விட்டுச்சென்ற, வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட, ஒய்வுபெற்ற மற்றும் ஏனைய காரணங்களின் பேரில் தீர்வுசெய்யப்படாத நீண்டகாலமாக இருந்து வரும் ஊழியர் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 46,561,004 ஆக இருந்தது. | 2014 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தின் பாதீட்டுச் சுற்றிக்கையின் பிரகாரம் கடன் மீதிகளை தீர்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | காசோலைகள் மூலம் வலயங்களுக்கு இடையிலான இடமாற்றம் பெற்று வந்த இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள் 03 மாதங்களுக்குள் தீர்வுசெய்யப்பட வேண்டும். என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். எவ்வாறாயினும் ஏதேனும் விசேட காரணங்களின் பேரிலும் மிக நீண்டகாலமாக |

| | | | |
|---|---|---|---|
| | | | இருந்தும் வரும் ஏதேனும் கடன் மீதிகளை அறவிடுவதற்கு உரியதான தகவல் இல்லாமையால் ஏதேனும் கடன் மீதிகளை இதுவரை தீர்வுசெய்ய முடியவில்லை என அறிய தருகின்றேன். |
| (ஆ) | அமைச்சுக்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் உட்பட 14 நிறுவனங்களுக்குஇடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்களுக்கு தீர்வுசெய்வதற்கு இருந்த கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 31,746,425 ஆக இருந்தது. | 2014 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தின் பாதீட்டுச் சுற்றிக்கையின் பிரகாரம் கடன் மீதிகளை தீர்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கட்ன மீதிகளைத் தீர்வுசெய்வதற்கு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் கடன் மீதிகள் இணங்காதவற்றை தீர்வுசெய்யும் போது சிக்கல்கள் காணப்படுவதுடன் அதனை சரிசெய்து எதிர்காலத்தில் அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். |

## 5. செயற்பாட்டு மீளாய்வு

## 5.1 செயலாற்றல்

### 5.1.1 அரசின் மானியம்

மாகாண அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக மீளாய்வாண்டிற்கு கிடைக்கப் பெற்றிருந்த நிதிஏற்பாடு மற்றும் பயன்பாடு தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | மூலம் | அங்கீகரிக்கப்பட்ட தொகை | செலவிடப்பட்ட தொகை ரூபா மில்லியன் | குறைப்பயன்பாடு | மொத்த வேலைகளின் மதிப்பீட்டுப் பெறுமதி |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % |
| (அ) | மாகாண திட்டவட்டமான மானியம் (PSDG) | 3,043.28 | 2,286.34 | 756.94 | 25 |
| (ஆ) | திட்டவட்டமான மானியம் (CBG) | 272.40 | 222.32 | 50.08 | 18 |
| (இ) | விசேட துறை அபிவிருத்தி செயற்திட்ட மானியம் (கல்வி) | 200.00 | 13.62 | 186.38 | 93 |
| (ஈ) | விசேட துறை அபிவிருத்தி செயற்திட்ட மானியம் (சுகாதாரம்) | 150.00 | 104.29 | 45.71 | 31 |
| | மொத்தம் | **3,665.68** | **2,626.57** | **1,039.11** | **28** |

**5.1.2 மாகாண அபிவிருத்தித் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக மாகாண அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புதிய பணிகள் மற்றும் தொடர்வேலை ஆகியவற்றுக்காக ரூபா 2,970,410,000 மில்லியன் மதிப்பீட்டு பெறுமதியுடைய 1,691 முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. மாகாண சபையின் செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் வேலை முன்மொழிவுகளின் செயன்முன்னேற்றம் பின்வருமாறு ஆகும்

| | விபரம் | புதிய வேலை | தொடர் வேலை | கையிலுள்ள பட்டியல் வேலைகளின் எண்ணிக்கை | மொத்த வேலைத் திட்டங்களின் எண்ணிக்கை | மொத்த வேலைத் திட்டங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | ரூபா மில்லியன் |
| (அ) | முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட | 1353 | 22 | 484 | 1375 | 1,923,262,991 |
| (ஆ) | 50% ஐ விட குறைவாக பூர்த்தி செய்யப்பட்ட | 38 | - | - | 38 | 226,977,705 |
| (இ) | 50% இற்கு மேல் பூர்த்தி செய்யப்பட்ட | 86 | | - | 86 | 518,571,273 |
| (ஈ) | ஆரம்பிக்கப்படாத | 192 | - | - | 192 | 301,598,031 |
| | மொத்தம் | **1669** | **22** | **484** | **1691** | **2,970,410,000** |

### 5.1.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

-------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சுகாதார அமைச்சின் தேசிய சிறுநீரக நோய் நிவாரண பிரிவின் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் வேர் இனங்காணப்படாத சிறுநீரக நோய் வட மேல் மாகாணத்திலும் பரவுவதற்கு காரணங்களை கண்டுபிடிப்பதற்காக மாகாண சுகாதார திணைக்களத்திடமிருந்தோ அல்லது வரிசை அமைச்சின் மூலம் அல்லது வடமேல் மாகாணத்தை இலக்காக கொண்டு முறையான ஆராய்ச்சியொன்றை மேற்கொள்ளாமை காரணமாக நோய் ஏற்படுவதற்கு காரணங்களை இணங்காண்பதற்கு முடியாமல் இருந்தது. | நோய் பரவுவதற்கான காரணங்களை கண்டு பிடிப்பதற்கு முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | ஆரம்பத்தை இணங்காணாத சிறுநீரக நோய் வடமேல் மாகாணத்தில் பரவுவதற்கான காரணத்தை ஆராய்ந்து பார்க்கப்படுகின்ற தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற நிகழ்ச்சிகள் பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற போதும் இந்த இணங்காணப்படாத சிறுநீரக நோய் வடமேல் மாகாணத்தில் பரவுவதற்குரிய விடயங்கள் மற்றும் அதற்காக இடவேண்டிய தீர்வுகள் தொடர்பாக அவ்வப்போது மாவட்ட அபிவிருத்தி குழுவில் கலந்துரையாடி உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. |
| (ஆ) | புத்தளம் மாவட்டத்தின் ஆபத்தில்லாத வலயங்களில் சிறுநீரக நோயாளிகளை இனங்காணும் சிகிச்சை செயற்பாடுகள் 2018 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 04 பிரதேசங்களில் மேற் கொள்ளப்பட்ட 06 சிகிச்சை | புத்தளம் மாவட்டத்தில் சிறுநீரக நோயாளர்களை இணங்காணும் சிகிச்சை மற்றும் நிவாரண நடவடிக்கைகளை அதிகரிப்பதில் | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இலக்கிடப்பட்டட நடாத்தப்பட்ட வேண்டிய கிராம சேவையாளர் பிரிவுகளின் பிரகாரம் 80 சதவீதமாக இருந்ததுடன் இந்த அளவு மேவுகை செய்யப்பட்டுள்ளது. மேலும் மேலதிகமாக உள்ள அனைத்து வேண்டுகோள்களும் மேவுகை செய்யப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| | முகாம்களின் போது ஆபத்துக்களை இனங்கண்ட நோயாளர்களின் எண்ணிக்கை 40 மற்றும் 2019 மே 31 ஆந் திகதி வரை 5 பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட 07 சிகிச்சை முகாம்களின் போது ஆபத்துக்கள் இணங்காணப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை 39 ஆக அவதானிக்கப்பட்டது. | கூடிய கவனம் செலுத்த வேண்டும். | |
| (இ) | சுகாதார அமைச்சின் தேசிய சிறுநீரக நோய் நிவாரண பிரிவின் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அனைத்து ஆபத்தான வலயங்களில் உள்ள 20 வயதுக்கு மேற்பட்ட அனைத்து நபர்களும் 03 ஆண்டுகளுக்கு 03 ஆண்டுகளுக்கு ஒரு முறை பரிசோதனைக்கு உட்பட வேண்டிய போதும் குருனாகல் மாவட்டத்தின் ஆபத்தான வலயங்களில் 2016 ஆம் ஆண்டு முதல் 2019 மே 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் சிகிச்சைகளின் பரீட்சிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை இலக்கிடப்பட்ட சனத்தொகைக்கு ஒப்பாக 08 ஆபத்தான வலயங்களில் 2016 ஆம் ஆண்டில் 03 சதவீதம் முதல் 34 சதவீதம் வரை 2017 ஆம் ஆண்டில் 0.1 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை 2018 ஆம் ஆண்டில் 02 சதவீதம் முதல் 07 சதவீதம் வரை 2019 ஆம் ஆண்டில் 0.5 சதவீதம் | அனைத்து ஆபத்தான பிரதேசங்களில் கூடுதலான அளவானோர் பரிசோதனைக்கு உட்படும் வகையில் நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும். | ஒவ்வொரு ஆண்டிலும் சனத்தொகை கணிப்பிட்டு அறிக்கைகளின் பிரகாரம் பரீட்சிக்கப்பட்ட நடை முறையின் பிரகாரம் இலக்கிடப்பட்ட சனத்தொகை புள்ளவிபரங்களில் வேறுபாடுகள் ஏற்படும். 2016, 2017 ஆம் ஆண்டுகளில் சிகிச்சை நிலையங்களுக்காக சமூகமளித்தவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு அஹெட்டுவாவ, பொல்பிதிகம ஆகிய சுகாதார மருத்துவ பிரிவுகளில் மாத்திரம் மேவுகை செய்யப்படும் வகையில் விசேட செயற்திட்டமொன்றாக (mega clinic) மேற்கொள்ளப் பட்டமையாகும். 2018, 2019 ஆம் ஆண்டு களுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள தரவுகள் மற்றும் சதவீதங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இல்லாமல் இருப்பதுடன் அவ்வாண்டுகளில் சிறுநீரக நிகழ்ச்சித்திட்டங்கள் வழிகாட்டிகள் மற்றும் செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் குறைந்த ஆபத்துள்ள வலயங்களுக்குரிய சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகங்கள் மற்றும் ஆபத்தில்லாத வலயங்களிலுள்ள சுகாரதார சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகங்கள் சிலவற்றில் காணப்படும் ஆய்வுகூட வசதிகள் அடிப்படையில் |

முதல் 06 சதவீதம் வரை குறைவான சதவீதமாக இருந்தமையால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் இலக்கினை நிறைவேற்ற முடியாமல் இருந்தது.

மருத்துவ சிகிச்சைகள் மற்றும் நிறுவன மட்டத்தில் தேவையானவை மாத்திரம் மேற்கொள்ளப்பட்டன.

| ஆண்டு | ஆபத்தான வலயம் | ஆபத்தில்லாத வலயம | மருத்துவ சிகிச்சை | அதிகரிப்பு | பரீட்சிக் ட்ட கப்பட்ட |
|---|---|---|---|---|---|
| **2018** | **16406** | **1366** | **1618** | **-** | **19390** |
| **2019** | **16231** | **2305** | **5670** | **13512** | **37718** |

(ஈ) சுகாதார வைத்திய அலுவலகங்கள் மூலம் ஆபத்தான வலயங்களில் உள்ள ஒவ்வொரு பாடசாலையிலும் நீரைப் பரீட்சிப்பதற்கு இதுவரை போதியளவு மேற்கொள்வதற்கு அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 11 ஆபத்தான வலயங்களில் அமைந்துள்ள 347 பாடசாலைகளில் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 187 பாடசாலைகள் மாத்திரமே பரீட்சிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 169 பாடசாலைகளின் நீர் குடிப்பதற்கு பொருத்தமற்றதென இணங்காணப்பட்டிருந்தது. அவ்வாறே பொல்பிதிகம, கிரிபாவ மற்றும் மஹவ ஆகிய சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகங்களுக்குரிய பாடசாலைகளில் நீர் மாதிரிப் பரிசோதனை மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

ஆபத்தான வலயங்களில் உள்ள ஒவ்வொரு பாடசாலையிலும் நீர் மாதிரிகளைப் பரீட்சிப்பதற்கு நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும்

நீர் மாதிரி பரீட்சித்தல் இலவசமாக மேற்கொள்ளப்படாமை காரணமாக அந் நிலைமை ஏற்பட்டுள்ளது. நீர் குடிப்பதற்கு பொருத்தமற்றதென இனங்காணப்பட்ட போதும் தற்காலிக தீர்வொன்றாக (Ro plant) சனாதிபதி செயலாற்றல் படையணியின் கீழ் கடற்படையினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. நிரந்தர தீர்வொன்றாக நீர் வழங்கல் செயற்திட்டம் இது தொடர்பாகவெளி நிறுவனங்களின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

நீரின் இரசாயன பொருள் (வன் உலோகம்) பரீட்சிப்பதற்காக தேவையான வசதிகள் தற்போது கறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது. எதிர்காலத்தில் அதற்காக தேவையான வசதிகளை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (உ) | மாகாண கொள்கை திட்டமிடல் மற்றும் திட்ட செயற்படுத்தல் திணைக்களத்தினால் மாகாண நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்தி முன்மொழிவொன்றின் கீழ் 46 பிரதேச செயலக பிரிவுகளில் ஆகக் குறைந்த 100 கிராம சேவையாளர் பிரிவுகளின் வாழ்க்கை நிலைமயை மேம்படுத்தும் நோக்கில் 100 கிராமங்களில் 100 வேலைகள செயற்திட்டத்திற்காக 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 200 மில்லியனான நிதிஏற்பாடுகளில் 157 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன. இங்கு ரூபா 13,750,000 நிதிஏற்பாடான 13 செயற்திட்டங்கள் தொடர் வேலையபாக்கப்பட்டமை ரூபா 103,459,283 நிதிஏற்பாடான 115 செயறதிட்டங்களும் எவ்வித செயன் முன்னேற்றமும் இல்லாமை மற்றும் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டமை காரணமாக ரூபா 7,740,000 நிதிஏற்பாட்டுடனான 16 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்டதன் பிரகாரம் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். | உடன்படிக்கை செய்யப்பட்ட அமைப்புக்களின் நியாயமான வேண்டுகோளின் அடிப்படையில் செயற்திட்டங்களை செயற்படுத்தும் போது ஏற்பட்ட நடைமுறைச் சிக்கலின் பேரில் 13 செயற்திட்டங்கள் தொடர் வேலையாக்கப்பட்டதன் பேரில் செய்யப்பட்டன. 2019 ஆம் ஆண்டில் காணப்பட்ட கடுமையான கட்டுநிதி பற்றாக்குறை காரணமாக ரூபா 88,834,633 தொகையான கையிலுள்ள பட்டியல்களாக காணப்பட்டதுடன் வேலை விடயங்கள் நிதி முன்னேற்றம் 0% ஆக காண்பிக்கப்பட்டுள்ளது. அந்த கையிலுள்ள பட்டியல்கள் அனைத்தும் தற்போது கொடுத்து தீர்க்கப்பட்டுள்ளது. 05 செயற்திட்டங்கள் தவிர ஏனைய சகல வேலைகளும் சீரற்ற காலநிலை காரணமாக நிர்மானிப்பதற்கு சிரமமாக இருந்தது. அவ்வாறே தேவைப்பாடு காணப்பட்ட போது காணியின் உரித்து திட்ட வட்டமாக உறுதிப்படுத்த முடியாததன் காரணமாக ஒவ்வொரு செயற்திட்டம் மற்றும் உடன்படிக்கை செய்யப்பட்ட காலம் போதியளவு இல்லாமை காரணமாக செயற்திட்டமொன்று இரத்துச் செய்யப்பட்டது. |

## 5.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பிரதேச செயல் பிரதேசத்திற்குரிய செம்பட்ட அட்டவில்லுவகெலே கிராமத்தின் 10 ஏக்கர் 01 ரூட் 22 பேர்ச் விசாலமான காணி நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக 2004 செப்தெம்பர் 03 ஆந் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அப்தோதைய அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கையில் குறித்த காணியை உரிய நபருக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு பதிலாக 2009 செப்தெம்பர் 23 ஆந் திகதி 05 அனுமதிப்பத்திரங்கள் மூலம் வேறு நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. இதன் போது 1982 ஆம் ஆண்டின் உரிய அனுமதிப் பத்திரத்தின் மூலம் கையளிக்கப்பட்ட காரணத்தினால் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய குத்தகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | குத்தகை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | கருத்துரை தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | மாகாண சுகாதார உள்நாட்டு மருத்துவ சமூக நலன்புரி நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் மகளிர் விவகார தொடர்பான அமைச்சின் தலிசீமியா நிதியத்தின் ரூபா 1,549,333 ஆன வைப்பு மீதியொன்று 03 ஆண்டுகளாக விளைவற்றுக் காணப்பட்டதுடன் எஞ்சிய 02 ஆண்டுகளில் செலவினம் மேற்கொள்ளும் வகை தொடர்பாக திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் | மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு ரூபா 2,188,000 தொகை திணைக்களத்தினால் 2017 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நான்கு ஆண்டு செயற்பாட்டு திட்டத்திற்காகவே விடுவிக்கப்பட்டது. அது தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்றது. எஞ்சிய தொகைக்காக புதிய |

| | | | |
|---|---|---|---|
| | | | செயற்திட்ட அறிக்கையொன்று சமர்ப்பிக்குமாறு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அச்செயற்திட்ட அறிக்கை கிடைத்ததன் பின்னர் உரிய நிதி ஏற்பாட்டை விடுவித்து மாகாணத்தின் நோயாளர்களுக்காக நிதியம் பயன்படுத்தப்படும். |
| (இ) | சுகாதார திணைக்களத்தின் பயன்படுத்தப்படும் 32.4042 ஹெக்டேயர் பரப்பளவிலான 23 காணிகளின் உரித்து குறித்த பிரதேச செயலகங்களிடம் இருப்பதாகவும் 31 காணிகளின் உரித்து வேறு அரச நிறுவனங்களிடம் இருப்பதாகவும் மேலும் 31 காணிகள் தனியார் துறையினரிடம் இருப்பதாக இனங்காணப்பட்டிருந்தது. மேலும், 23 காணிகளின் உரித்து குறிப்பாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | காணியை கையேற்பதற்கு முறையாகவும் விரைவாகவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சுகாதார நிறுவனம் அமைந்துள்ள செயலகத்தின் வசமுள்ள காணியை திணைக்களத்திற்கு கையேற்பதற்காக பிரதேச செயலாளர்களிடம் வேண்டுகோள் விடப்பட்டிருந்ததுடன் அவற்றில் அநேகமானவை கையேற்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறித்த கடமைகள் தாமதத்திற்கு பிரதேச செயலகத்திற்கு மீண்டும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | குருணாகல் மாவட்டத்திற்குரிய 08 ஆபத்தான வலயங்களில் ரஸ்னாயகபுர மற்றும் அஹறுவாவ பிரதேச செயலக பிரிவுகளின் சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகங்கள் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. ரஸ்நாயக்கபுர பிரதேச செயலகத்திற்காக ரூபா 16,140,053 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம் 2018 ஆகஸ்ட் 13 ஆந் திகதி திறந்து வைக்கப்பட்ட போதும், 2019 யூன் மாதம் வரையிலும் தேவையான மனித வளங்கள் மற்றும் பௌதீக வளங்கள் வழங்கப்படாமை காரணமாக அது இயங்கும் நிலைக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. அந்நிலைமை மீது ரஸ்நாயக்க பிரதேசத்தில் சிறுநீரக நோயாளர்களை இனங்காணுதல் மற்றும் நிவாரண செயற்பாடுகள் கொட்டவெஹெர சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் மூலமும் அஹட்டுவாவ பிரதேசத்தின் நோயாளர்களை இனங்காணுதல் கல்கமுவ மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ள நேர்ந்திருந்தது | ரஸ்னாயகபுர மற்றும் அஹறுவாவ சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகங்களை விரைவில் தாபித்து சிறுநீரக நோயாளர்களை இனங்காணும் சிகிச்சையகங்கள் செயற்படுத்த வேண்டும். | ரஸ்னாயகபுர சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகத்திற்காக பதவியணியினரை ஈடுபடுத்தி செயற்பாட்டு நிலைமைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அஹறுவாவ பிரதேச செயலக பிரிவில் விசேட நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டதுடன் அது ஆபத்துள்ள வலயமொன்றாக இனங் காணப்ட்டது. அவ்விசேட திட்டத்தின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் மீண்டும் பரீட்சிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| (உ) | தம்பதெனியா ஆதார வைத்தியசாலையின் இரத்த வடிகட்டல் பிரிவினை நிர்மாணிப்பதற்காக 2018 ஆம் ஆண்டின் போது சுகாதார அமைச்சிலிருந்தும் மாகாண திட்டவட்டமான அபிவிருத்தி மானியங்களின் கீழ் ரூபா 15,597,878 தன நிதி ஏற்பாடு மற்றும் இருத்த வழிகாட்டல் நிலையத்திற்கு தேவையான உபகரணங்களையும் கொள்வனவு செய்வதற்கு 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 28,396,400 மற்றும் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 1,046,854 ஆன நிதி ஏற்பாடு கிடைக்கப்பெற்றிருந்த பொது அப்பிரிவின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வழிகாட்டல் பிரிவினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | இதற்காக தேவைப்படுகின்ற சுகாதார பதவியணியினர் வழங்கப்படாமை காரணமாக இந் நிலைமை ஏற்பட்டிருந்தன |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | புத்தளம் ஆதார வைத்தியசாலையின் இரத்த வடிகட்டல் பிரிவின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக சுகாதார அமைச்சிடமிருந்து 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 14,013,709 மற்றும் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 1,046,854 ஆன நிதி ஏற்பாடு கிடைத்திருந்த போதும் மீளாய்வாண்டு அதன் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | புத்தளம் ஆதார வைத்தியசாலையின் இரத்த வடிகட்டல் பிரிவின் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மூலதன நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்ட காரணத்தினால் 2019 ஆம் ஆண்டில் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் 2020 ஆம் ஆண்டில் நிதி ஏற்பாடுகளை பெற்றுக் கொள்ள வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இதற்காக வரிசை சுகாதார அமைச்சின் மூலம் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த நீர் சுத்திகரிப்பு இயந்திரம் Ro. Machine) மற்றும் வழிகாட்டல் இயந்திரம் (Dialysis Machine) கொள்வனவு செய்து எமக்கு வழங்கியிருக்கவில்லை. |
| (எ) | ஆயுர்வேத திணைக்களத்தின் உற்பத்தி இயலளவு காணப்படும் போது 08 மருந்து வகைகளை மருத்தக கூட்டுத்தாபனத்திடமிருந்து கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்த காரணத்தினால் ரூபா 2,133,161 தொகை திணைக்களத்திற்கு மேலதிகமாக செலவிடுவதற்கு நேர்ந்தது. | திணைக்களத்தின் மருந்து உற்பத்திகளை அதிகரித்து கூட்டுத்தாபனத்திடமிருந்து கொள்வனவு செய்யும் அளவினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆயுர்வேத வைத்தியசாலை மற்றும் மத்திய மருந்தகங்களின் வருடாந்த தேவைப்பாடு 100% பூர்த்தி செய்வதற்கு தேவையான மனித மற்றும் பௌதீக வளங்கள் எமது திணைக்களத்தின் மருந்து உற்பத்திசாலையில் காணப்படவில்லை. அதன் பிரகாரம் வருடாந்த தேவைப் |

| | | | |
|---|---|---|---|
| | | | பாட்டில் ஏதேனும் சதவீத மொன்று மருந்துக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கட்டாயமாக கொள்வனவு செய்யப்பட வேண்டியுள்ளது. |
| (ஏ) | 2004 திசெம்பர் 31 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட விவசாய அமைச்சின் விவசாய தொழில் முயற்சி அபிவிருத்தி சுழற்சிக் கடன் நிதியத்தை ஆரம்பிப்பதற்காக 2019 சனவரி 19 ஆந் திகதி வடமேல் விவசாய அமைச்சின் செயலாளரினால் தயாரிக்கப்பட்ட விதிக் கோவைக்கு வடமேல் மாகாண ஆளுநரின் அங்கீகாரம் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. வேண்டும். | நிதியமொன்றை தாபிக்கும் போது முறையான அங்கீகாரமொன்றை பெற்றுக் கொள்ளல் வேண்டும். | 2004 ஆம் ஆண்டின் போது இந்த அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட சுழற்சிக் கடன் முறைமை வடமேல் மாகாண ஆளுநரினால் அங்கீகரிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்ட கடிதத்தை கண்டு பிடிக்க முடியாமல் இருந்ததுடன் சுழற்சிக் கடன் தொகைக்குரிய விதிக்கோவைக்காக எதிர்காலத்தில் கௌரவ ஆளுனரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். |
| (ஐ) | விவசாய அமைச்சின் சுழற்சிக் கடன் நிதிய முன்மொழிவுத் திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து 2019 ஆகஸ்ட் 03 ஆந் திகதி வரை விடுவிக்கப்பட்ட மொத்த மீள் நிதியிடல் கடன் தொகை ரூபா 365,108,000 ஆக இருந்ததுடன் அறவிடப்பட்ட மீளன் நிதியிடல் கடன் தவணை தொகை ரூபா 249,946,259 ஆக இருந்தது. அத் திகதியில் பின் நிதியிடல் கடன்பட்டோர் மற்றும் காசு மீதி முறையே ரூபா 115,161,141 மற்றும் ரூபா | சுழற்சிகடன் நிதியம் நியதிச் சட்டமொன்று மூலம் தாபிக்க வேண்டியதுடன் நியதிச் சட்டத்தின் பிரகாரம் இறுதிக் கணக்கு தயாரித்தல் மற்றும் கணக்காய்வு மேற்கொள்ள வேண்டும். | 2004 ஆம் ஆண்டு முதல் சுழற்சி கடன் நிதியம் தொடர்பாக இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டமைக்கான தகவல்கள் கண்டு பிடிக்க முடியாமல் இருந்ததுடன், 2019 ஆகஸ்ட் மாதம் முதல் இதுவரை தயாரிக்கப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | 8,141,614 ஆக இருந்ததுடன் இதற்காக 2004 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை சுழற்சிக் கடன் நிதியம் தொடர்பாக இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | இறுதிக் கணக்குகளின் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன |
| (ஒ) | கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் இளையோர் பால் பண்ணை கிராம செயற்திட்டம் கால்நடை மருத்துவர்களினதும் கால் நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்களினதும் கருத்துக்களை கேட்காமலும் சாத்திய வள ஆய்வொன்றை மேற்கொள்ளல் ஆரம்பிக்கப்பட்டிருந்த செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 400 நலனாலிகளில் 179 நலனாலிகளுக்கு மாத்திரம் செயற்திட்டம் செயற்படுத்தப்பபட்டிருந்தது. இதனால் அரசின் நிதி ஏற்பாடு ரூபா 16,970,000 செலவிடப்படாமல் தேவையற்ற வகையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் சாத்திய வள ஆய்வொன்று மேற் கொள்ளப்பட்டு நடைமுறை ரீதியில் செயற்படுத்தக் கூடிய செயற்திட்டங்கள் மாத்திரம் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவித்திருக்க வில்லை. |
| (ஒ) | குருணாகல் நகர மத்தியில் அமைந்துள்ள 01 ஏக்கர் 4.3 பேர்ச் அளவான காணி நீண்ட கால குத்தகை அடிப்படையில் 15 ஆண்டுகளுக்கு முன் ரோயல் எடியுகேஷனல் சேர்விசஸ் தனியார் கம்பனிக்கு வழங்குவதற்கு காணி ஆணையாளர் நாயகத்தினால் 2014 ஆம் ஆண்டின் போது மாகாண காணி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. மாகாண காணி ஆணையாளரால் நெல் சந்தைப்படுத்தல் சபையுடனான பழைய உடன்படிக்கையை இரத்துச் செய்து புதிய உடன்படிக்கையொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்காமல் விலை மதிப்பிட்டு திணைக்களத்தின் அறிக்கையின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டு முதல் 2018 திசெம்பர் 31 வரை ரூபா 32,000,000 தொகையான 05 ஆண்டு நிலுவையாக கொடுப்பனவு செய்வதற்கு உரிய நிறுவனத்திற்கு | 2019 திசெம்பர் 31 ஆந் திகதி பழைய குத்தகை உடன்படிக்கை இரத்தாவதால் காணியை அரசிற்கு கையேற்றல் மற்றும் சரியாக குத்தகைக்கு வழங்குதல் நிலுவை கடனை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ரோயல் எடியுகேஷனல் சேர்விசஸ் தனியார் கம்பனி மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபையுடன் ஏற்படுத்திக் கொண்ட குத்தகை ஒப்பந்தம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்துள்ளதுடன் அதனை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு 2019 நவம்பர் 19 ஆந் திகதி கடிதத்தின் மூலம் பிரதேச செயலகத்தினால் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு அறிவிக்கப்பட்டது. அவ்வாறே 2014 ஆம் |

| | | | |
|---|---|---|---|
| | அனுப்பியிருந்த போதும் இந் நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | ஆண்டில் குறித்த காணிக்காக அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதன் பின்னர் மதிப்பீடு பெற்றுக் கொள்ளப்பட்டு குத்தகை கணக்கிடப்பட்டு மேற்படி கம்பனிக்கு குத்தகை கணக்கிடப்பட்டு மேற்படி கம்பனிக்கு நீண்டகாலக் குத்தகை தயாரிப்பதற்கு உரிய ஆவணங்களை சமர்ப்பித்து கடப்பாடொன்றை ஏற்படுத்தியுள்ளதாக தயவுடன் அறிய தருகின்றேன். |

## 5.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

----------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வடமேல் மாகாணத்தின் இரண்டு பிரதேச மருந்துக் களஞ்சியங்கள், 08 ஆதார வைத்தியசாலைகள் மற்றும் 40 பிரதேச வைத்தியசாலைகள் என்பவற்றில் 2019 செப்தம்பர் 30 இல் உள்ளவாறு ரூபா 1,389,928 பெறுமதியான காலாவதியான மருந்து இருப்பொன்றும் இரண்டு பிராந்திய களஞ்சியங்கள் 06 ஆதார வைத்தியசாலைகள் ஒரு பிரதேச வைத்தியசாலை மற்றும் ஒரு வைத்திய அத்தியட்சகர் அலுவலகம் என்பவற்றில் ரூபா 1,470,156 பெறுமதியான தரத்தில் சித்தியடையாத மருந்து இருப்பொன்று அவதானிக்கப்பட்டது. | மருந்துகள் காலாவதியாவதை குறைக்கும் வகையில் மருந்துகள் இருப்பு நடைமுறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்த வேண்டும். | காலாவதியான மருந்துகள் இருப்பொன்றும் இரண்டு மற்றும் தரத்தில் குறைந்த மருந்துகள் தொடர்பாக மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் மூலம் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அச்செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயன்முன்னேற்றத்தை பெற்றுக்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டமொன்று மூலம் காலாவதியான இருப்பு குறைத்துக் கொள்ளப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துவதற்கு போதியளவு போக்குவரத்து வசதிகள் இயலாமை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு ஒப்பாக 48 பொது சுகாதார பரிசோதகர்களின் வெற்றிடங்கள் காணப்படுதல் மற்றும் அனைத்து மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகங்களுக்கு புகை இயந்திரங்கள் வழங்குவதற்கு 22 புகை இயந்திரங்கள் மேலும் தேவையான இருந்தமை போன்ற காரணங்களால் டெங்கு ஒழிப்பு செயற்பாடுகளை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது. | டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துவதற்கு தேவையான வசதிகள் வழங்குவது தொடர்பில் போதியளவு கவனம் செலுத்தப்பட வேண்டும் | முன்னுரிமை அடிப்படையில் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகங்கள் மூலம் மனித வளங்கள் மற்றும் ஏனைய வளங்களை பயன்படுத்துதல் மற்றும் புகை இயந்திரங்களை மலேரியா பிரிவிலிருந்து வழங்கி டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |
| (இ) | விவசாய திணைக்களத்தினால் 2019 ஆம் ஆண்டின் போது கிராமங்களை உருவாக்குதல் மற்றும் 25000 மாங்கன்றுகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 10,000,000 ஆன நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. இப் கொள்வனவிற்குரிய பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்படாமல் இருந்ததுடன் விவசாய திணைக்களத்தின் நாற்று மேடைகளிலிருந்து ரூபா 250 வீதம் கொள்வனவு செய்வதற்கு முடியுமாக இருக்கையில் தனியார் நிறுவனமொன்றிலிருந்து ரூபா 380 வீதம் கொள்வனவு செய்தமையால் ரூபா 3,250,000 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | பெறுகை திட்டத்தில் உள்ளக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட பெறுகை திட்டத்திற்கு இச் செயற்திட்டத்தை உள்ளடக்க முடியாமையால் இந்நிகழ்ச்சி திட்டம் வடமேல் மாகாண பிரதான செயலாளரின் 2019 யூன் 12 ஆந் திகதி அங்கீகரித்து அனுப்பிய அபிவிருத்தி திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் செயற்பட நேர்ந்ததுடன் தற்போது வருடாந்த திட்டம் தயாரிக்கப்பட்டு முடிவடைந்துள்ளதாக தயவுடன் அறிய தருகின்றேன். |

## 5.4 மாகாண வீதிகள் அபிவிருத்தியும் மேம்படுத்தலும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 / 2019 ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகங்களினால் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென இனங்காணப்பட்டு தயாரிக்கப்பட்ட நிதி முன்னுரிமை பதிவேட்டில் இல்லாத 13 வீதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள் துரிதமாக பூர்த்தி செய்யப்பட வேண்டியது என்பதை காரணமாக குறிப்பிட்டு ஆளுனரின் அங்கீகாரத்தின் பேரில் பெறுகை செயற்பாட்டிற்கு புறம்பாக ரூபா 259,116,132 ஆன உடன்படிக்கை பெறுமதியில் அநுராதபுரம், பொறியியலாளர் தொடர்பான மத்திய உசாத்துணை பணியகத்திற்கு (CECB) வழங்கப்பட்டிருந்தது. 2019 ஒக்தோபர், நவம்பர் மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த மேற்குறித்த வீதிகளில் அரைவாசி 2019 திசெம்பர் 31 வரையிலும் 50 சதவீதத்திற்கும் குறைந்த பௌதீக முன்னேற்றத்தை காண்பித்திருந்ததுடன் ஒரு வீதி மாத்திரம் 100 சதவீதமான செயன்முன்னேற்றத்தைக் காண்பித்திருந்தது. நிதி முன்னேற்றமும் 26 சதவீதம் முதல் 79 சதவீதம் வரை காணப்பட்டது. | காணப்படும் சட்ட விதிகள் சுற்றறிக்கைகளுக்கு இணங்க செயற்பட வேண்டும் | மத்திய பொறியியலாளர் பணியகத்திற்கு கேள்வி அளித்தல், இத் திணைக்களத்தின் தீர்மானம் ஒன்றல்ல அத்துடன் எம்மால் போட்டி விலை கோருவதற்காக தீர்மானித்து நிறைவேற்றுவதற்காக தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், இவ்வாண்டில் எமது எல்லைக்கு அப்பால் கௌரவ ஆளுநரின் கட்டளையின் படி அப் பொறியியலாளர் அலுவலகத்தின் மூலம் அச் செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களுக்காக கொடுப்பனவு செய்வதற்கு போதியளவு கட்டுநிதி கிடைக்காமை காரணமாக நிதி முன்னேற்றத்திற்கு ஒப்பாக பௌதீக முன்னேற்றம் குறைவாக இருந்தது. |

## 5.5 வெளிப்படையான முறைகேடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இப்பாகமுவ வலயக் கல்வி வலயத்திலிருந்து கிடைக்கும் காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் பதிவு வைக்கப்பட்டு உறுதிப்படுத்தப் படாதிருந்ததுடன் 2010 யூலை முதல் 2010 நவம்பர் 30 சந்தர்ப்பங்களில் ரூபா 5,075,309 கூட்டுத்தொகையான பணம் தொடர்பாக பற்றுச்சீட்டுக்களின் மூலப்பிரதிகளை கொடுப்பனவு செய்வோருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2008 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரை 04 ஆண்டுகளில் கிடைத்திருந்த ரூபா 2,411,457 தொகை சிறாப்பரினால் வங்கியிலிடப்படாமல் இருந்ததுடன், செயற்பாடற்றதாக்கப்பட்ட இரண்டு கணக்குகளுக்குரிய வங்கி கணக்கிணக்கத்தை தயாரிப்பதற்கும் சிறாப்பரினால் சேகரிக்கப்பட்ட பணத்தை வங்கியிலிடுதல் தொடர்பாக ஆராய்ந்து பாரத்து அறிக்கையிடுவதற்கு பல சந்தர்ப்பங்களில் பல குழுக்கள் நியமனம் செய்யப்பட்டிருந்த போதும் அந்த சகல குழுக்களினாலும் அச்செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களும் அது தொடர்பாக கவனமொன்று செலுத்தியிருக்கவில்லை. மேலும் 2007 ஆம் ஆண்டிலிருந்து 2012 மே மாதம் வரை வங்கிக் கணக்கிணக்கம் தயாரிக்காமை காரணமாக செயற்பாடற்றதாக்கப்பட்ட மக்கள் வங்கியில் பேணிச் செல்லப்பட்ட பொது | முறையான பரிசோதனையொன்றை மேற்கொண்டு வங்கி கணக்கிணக்கத்தை முறையாக தயாரித்தல் மற்றும் வங்கியிலிடாமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் | கருத்துரை தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் ஆசிரிய சம்பள வங்கிக் கணக்கு ஆகிய இரண்டு கணக்குகளிற்கு பதிலாக 2012 யூன் மாதத்தின் போது இலங்கை வங்கியில் இரண்டு புதிய கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | விவசாய, கடற்றொழில், கால்நடை உற்பத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சிற்குரிய வாகனமொன்று 2014 திசெம்பர் 30 ஆந் திகதி விபத்திற்குட்பட்டமையால் ரூபா 3,960,000 காப்புறுதி நட்டஈடாக அறவிடுவதற்கும் எஞ்சிய தொகையான ரூபா 340,000 தொகையை சாரதியிடமிருந்து அறவிடுவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதும் காப்புறுதி இழப்பீட்டை பெற்றுக் கொள்வதாக அல்லது எஞ்சிய பணத்தை அறவிடுவதாக உறுதிப்படுத்தப்படவில்லை. | பொறுப்பு வாய்ந்த தரப்பினர்களிடமிருந்து நட்டதை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | விவசாய அமைச்சின் PB-4121 ஆம் இலக்க கெப் வண்டியின் விபத்து தொடர்பாக சாரதியிடம் அறவிடுவதற்கு பரிந்துரைக்கப்பட்ட தொகையை சாரதியின் சம்பளத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக இதுவரை பிரதான செயலாளர் அறிவிக்காமல் இருந்ததுடன் அது தொடர்பாக விசாரித்து மிக விரைவில் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். |

## 5.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

--------------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ---------------------------------- | ------------- | ---------------------------------- |
| (அ) | 2018 ஒக்தோபர் 10 ஆந் திகதி வடமேல் மாகாண சபை கலைக்கப்பட்டதன் தலைவர் குடியிருப்பதற்காக பொருத்தமான உத்தியோகபூர்வ விடுதியொன்று மாகாண சபையிடம் காணப்படும் பொது தலைவரின் உத்தியோகபூர்வ விடுதிக்காக 2019 சனவரி | மாகாண சபையிடம் உள்ள உத்தியோக பூர்வ விடுதி உள்ளதால் அந்த உத்தியோகபூர்வ வீட்டை தலைவருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை | மாகாண சபை அலுவலகத்திடம் உத்தியோக பூர்வ விடுதியொன்று காணப்படவில்லை மாகாண சபை |

| | | | |
|---|---|---|---|
| | மாத்தின் போது ரூபா 180,000 செலவிடப்பட்டு வருடாந்த குத்தகை அடிப்படையில் தனியார் வீடொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | எடுக்க வேண்டியதுடன் வீட்டினைப் பயன்படுத்துவதையும் உறுதிப்படுத்த வேண்டும். | அமைச்சிடம் காணப்படுத் உத்தியோக பூர்வ விடுதியொன்றை பெற்றுக் கொள்ள அப்போது இருந்த சபை யொன்றினால் பிரதான செயலாளரிடம் விசாரித்தன் பின்னர் (வாய்மொழி மூலம்) அதற்கான அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. அதன் பிரகாரம் தலைமை செயலாளரின் அங்கீகாரத்தின் பேரில் இவ்வீடு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |
| (ஆ) | கல்கமுவ ஆதார வைத்தியசாலைக்கு தொடர்ச்சியாக நீரை வழங்குவதற்கு 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 15 மில்லியன் அளவில் செலவிடப்பட்டு கல்கமுவ நீர்த்தேக்கத்திலிருந்து நீர் செயற்திட்டமொன்று செயற்படுத்தியிருந்த போதும் நீர் வழங்குவதற்கு ஸ்தாபிக்கப்பட்ட 02 நீர் பம்பிகளை செயற்படுத்துவதற்கு கூட போதியளவு மின்சார முறைமை இயலளவு போதாமை காரணமாக செற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு 03 ஆண்டுகள் கடந்திருந்த போதும் வைத்தியசாலைக்கு நீரைப் பெற்றுக் கொள்ள முடியாமல் இருந்தது மேலும் உரிய திட்டமொன்று இல்லாமலும் நீர் மாதிரி பரிசோதிக்கபடாமலும் ரூபா 2,253,856 செலவிடப்பட்டு அமைக்கப்பட்ட கிணற்றின் நீர் மண் உடனும் அதிக உப்புத் தன்மையுடனும் இருந்தால் குடிப்பதற்கு பொருத்தமற்றதாக இருந்தது. | கிணற்றின் நீரை வைத்தியசாலையின் தேவைகளுக்காக பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் | கல்கமுவ ஆதார வைத்தியசாலைக்கு ஏனைய செயற்பாடுகளுக்காக நீரைப் பெற்றுக் கொள்வதற்காக கிணறு நிர்மாணிக்கப்பட்டதுடன் குடி நீர் தேவைக்கு அல்ல என அறிய தருகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | விவசாய அமைச்சினால் 2018 ஆம் ஆண்டில் கொடுவாவ 02 மீன்பிடி துறைமுகங்களில் ரூபா 297,507 ஆன அரசின் மானிய தொகையின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த 03 மேவுகைகளை கழற்றி அகற்றப்பட்டிருந்தன. மேலும்,மீன்பிடி படகுகள் மற்றும்நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் வழங்குவதன் கீழ் புத்தளம் மாவட்டத்திற்காக 146 தெப்பங்கள் 50 சதவீத நலனாளி பங்களிப்பில் வழங்கப்பட்டிருந்ததுடன் தெரிவு பரிசோதனையின் பிரகாரம் 15 தெப்பங்களில் 09 உரிய நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதால் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 250,730 ஆன செலவினம் உட்பட ரூபா 548,237 தொகை சிக்கனமற்ற செலவினங்களாக இருந்தது. | மேவுகை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட வேண்டும். தெப்பம் குறித்த தரத்தில் தயாரிக்கப்பட வேண்டும். | அதிக பருவக்காற்று ஏற்படுவதும் மற்றும் கல் சுவர் அமைக்க முடியாமையினால் ஏற்படும் கடலரிப்பு காரணமாக தகரங்களின் பாதுகாப்பிற்கு அந்த மேவுகைகள் கழட்டி வைக்கப்பட்டுள்ளது. 09 தெப்பங்களில் 05 தெப்பங்கள் தவறுகளுடன் நிலைமையில் உள்ளதாக அமைச்சினால் வெளிக்களபொறுப்பு உத்தியோகத்தரின் பின்தொடர் நடவடிக்கை அறிக்கையிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அது தொடர்பாக அறிக்கையிடப்படாமையால் ஆராய்ந்து பார்த்து தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுப்பதாக அறிய தருகின்றேன். |

## 5.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 5.7.1 விளைவற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டில் ரூபா 3,408,168 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 07 மாறுபட்ட நீர் உற்பத்தி இயந்திரங்களில் (Distill water operator machine) தம்பதெனியா, நிகரவரட்டிய மற்றும் கல்கமுவ வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்ட 03 இயந்திரங்கள் 1 ½ வருடங்களில் செயலற்ற நிலைமை காணப்படுகின்றது. | விளைவற்ற சொத்துக்களைப் பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | Distill water operator machine இயந்திரத்தின் மூலம் நீரைச் சுத்திகரித்தல் செலவினம் அதிகமாக இருப்பதால் தற்போது இயந்திரம் கொள்வனவு செய்யப்படாமல் இருப்பதுடன் ஆதார வைத்தியசாலை உட்பட மாவட்டத்தின் சகல வைத்தியசாலைகளிலும் நீர் தேவைப்படுவதன் பிரகாரம் கொள்வனவு செய்து வழங்குவதாக அறிய தருகின்றேன். |

### 5.7.2 வாகனப் பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | விவசாய திணைக்களத்திற்குரிய வாரியபொல மற்றும் கல்கமுவ விவசாய பண்ணைகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 07 வாகனங்கள் மற்றும் விவசாய அமைச்சிற்கு சொந்தமான ஒரு வாகனமும் 2008 ஆம் ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டது. | விளைவற்ற சொத்துக்களைப் பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டியதுடன் இல்லாவிட்டால் கைதவிர்ப்புச் செய்தல் வேண்டும். | **73ஸ்ரீ 2758 வாகனம்** வாரியபொல விவசாய கல்லூரிக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | | | <u>**109 ஸ்ரீ 475 மற்றும் K–120 வாகனங்கள்**</u> புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br><u>**41ஸ்ரீ2014 வாகனம்**</u> நிக்கவரட்டிய பிரதி விவிசாய பணிப்பாளர் (விதை) அலுவகத்திற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br><u>**73-2757, 72-3233, 27-3878**</u> வாகனங்கள் கைதவிர்ப்பு செயற்பாடுகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br><br><u>**KS – 8730**</u> ஜீப் வண்டி கௌரவ அமைச்சருக்கு ஒதுக்கப்பட்ட வாகனமாகும். வடமேல் மாகாண சபையின் காலம் முடிவடைந்தும் அமைச்சின் வளவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்திடம் காணப்படும் 24 வாகனங்கள், மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சிடம் காணப்படும் 11 வாகனங்கள், மாகாண நீர்ப்பாசன திணைக்களத்திடம் காணப்படும் 11 வாகனங்கள் மற்றும் வடமேல் மாகாண போக்குவரத்து அமைச்சிடம் 09 வாகனங்களை 55 வாகனங்கள் என அந்நிறுவனத்தின் பெயரில் கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த நிறுவனங்கள் பெயரிலுள்ள வாகனங்களின் உரித்தை கையேற்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ்வாகனங்கள் வெவ்வேறு அமைச்சின் கீழ் காணப்படுவதால் ஒவ்வொன்றாக பரீட்சித்து கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

| | | |
|---|---|---|
| (இ) உள்ளூராட்சி மன்றங்களின் பிரதான நிறைவேற்றுனர் களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த வாகனங்களுக்காக எரிபொருள் எல்லைகளை வடமேல் மாகாண தலைமை அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடு வதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருந்ததுடன் உள்ளூராட்சி மன்றங்களினாலும் எரிபொருள் எல்லைகள் விதிக்கப்பட்டிருக்க வில்லை. இதன் காரணமாக எவ்வித வரையறையுமில்லாமல் எரிபொருள் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் உட்பட சபை தீர்மானத்தின் பேரில் போக்குவரத்து படிகள் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. | எரிபொருள் எல்லைகளை விதிப்பதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள கௌரவ நகர பிதாக்களுக்கும் / கௌரவ தலைவர் களுக்கும் வழங்கும் எரிபொருள் எல்லைகள் தொடர்பாக எனது வா/உள்.தி/01/11/02/34 ஆம் இலக்கம் மற்றும் 2020 சனவரி 13 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் உள்ளூராட்சி மன்றங்களிலிருந்து பெற்றுக் கொண்ட தகவல்களின் பிரகாரம் அவதானிப்பிற்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. |

## 5.8 பதவியணியினர் நிர்வாகம்

### 5.8.1 மாகாண சபை (பாடசாலை மற்றும் சுகாதாரம் தவிர) நிறுவனங்களின பதவியணியினர் தொடர்பான அவதானிப்புக்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) வீதி பராமரிப்பு மற்றும் வீதி அபிவிருத்தியின் போது வெளிக்களத்தில் மேற்கொள்ளப்படும் கண்காணிப்பு செயற்பாடுகளை மேற்கொள்கின்ற இலங்கை தொழில்நுட்ப சேவையின் 19 வெற்றிடங்கள் நிரப்பப்படாமையால் ஆண்டில் வீதி அபிவிருத்தி மற்றும் பராமரிப்புக்களின் வெற்றி தொடர்பில் இந்நிலைமை அதிகளவில் தாக்கம் செலுத்தியிருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய அதிகாரிகளுக்கு அடிக்கடி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வடமேல் மாகாண தலைமை செயலகத்தின் 63 பதவிகள், கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் 68 பதவிகள் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் 30 பதவிகள், கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் 10 பதவிகள் மாகாண இறைவரி திணைக்களத்தின் 11 பதவிகள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 05 பதவிகள் மற்றும் காணி ஆணையாளர் திணைக்களத்தின் 04 பதவிகள் என 191 பதவிகளில் ஊழியர் வெற்றிடங்கள் காணப்பட்டன. | போதியளவு பதவியணியினரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | நிதி ஏற்பாடு, பௌதீக வளங்கள், சேவை தேவைப்பாடு ஆகிய விடயங்கள் கருத்திற் கொள்ளப்பட்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால் இப்பற்றாக்குறை காணப்படுகின்றது. பதவிகளில் உள்ள வெற்றிடங்கள் தற்போது பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் சில பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. |
| (இ) | பிரதேச சபைகளில் செயலாளர் பதவிகள் முகாமைத்துவ உதவியாளர் (அதி தரம்) பதவியொன்றாக இருந்த போதும், வடமேல் மாகணத்தின் 29 பிரதேச சபைகளில் 10 பிரதேச சபைகளுக்காக அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் 02 சபைகளுக்கு முகாமைத்துவ உதவியாளர்களும் மேலும் ஒரு சபைக்காக முகாமைத்துவ உதவியாளர் ஒருவரும் மற்றுமொரு சபைக்காக ஓய்வு பெற்ற முகாமைத்துவ உதவியாளர் (அதி) உத்தியோகத்தர் ஒருவரும், நீண்டகாலமாக பதில் கடமைக்காக நியமனம் செய்யப்பட்டிருந்தனர். அதில் சில நியமனங்கள் வடமேல் மாகாணத்தின் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு வழங்கியிருந்ததுடன் சில நியமனங்கள் உள்ளூராட்சி மன்ற ஆணையாளரால் வழங்கப்பட்டிருந்த இந்நியமனங்களுக்கு பதில் கடமை படிகள் பெற்றுக் கொள்வதற்கு உரித்து இந்த | பிரதேச சபை செயலளர் பதவிகளுக்காக பொருத்தமானவர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | நகர சபையொன்று மற்றும் பிரதேச சபையொன்றாக செயலாளராக கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் உயர்ந்த வகையில் உள்ளூராட்சி மன்ற துறை தொடர்பாக உரிய தெளிவொன்றும் அனுபவமுள்ள உத்தியோகத்தர்களை வெற்றிடங்கள் காணப்படும் செயலாளர் பதவிக்காக பதில் கடமை அடிப்படையில் நியமிப்பதற்கு நிரந்தர ஊழியர்களை நியமனம் செய்யும் வரை கடமை மேவுகை செய்வதற்கு உள்ளூராட்சிமன்ற திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது. நிரந்தர |

உத்தியோகத்தர்களுக்கு இல்லாதிருந்த போதும் சில உத்தியோகத்தர்களுக்கு பதில் கடமைப் படிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதற்கு முன்னர் ஏனைய உத்தியோகத்தர்களை நியமித்தல் உள்ளூராட்சிமன்ற திணைக்களத்தின் உள்ளக வேலைத்திட்டமொன்றாகும். வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு 2019 பெப்ரவரி 13 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் 08 அபிவிருத்தி உத்தியோகத்தர்களை 08 பிரதேச சபைகளின் செயலாளர் பதவிகளுக்கும், பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டதுடன் 2020 மார்ச் 12 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிதரத்திற்கு பதவி உயர்த்தப்பட்ட 07 உத்தியோகத்தர்கள் உள்ளூராட்சி மன்றங்களில் செயலாளர் பதவிகளுக்காக நியமனம் செய்யப்பட்டனர். அதில் 05 பேர் சேவைக்கு அறிக்கையிட்டு இருந்தனர். வனாத்துவில்லு மற்றும் கிரிபாவ பிரதேச சபைக்கு நியமிக்கப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்கள் பதவியினை பொறுப்பேற்பதை

| | | |
|---|---|---|
| | | நிராகரித்திருந்தனர். இதன் காரணமாக பதவிகள் நீண்ட காலமாக வெற்றிடங்களாக இருந்தன. |

### 5.8.2 பாடசாலைப் பதவியணியினர்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வடமேல் மாகாணத்தில் 918 ஆசிரியர் வெற்றிடங்கள், 71 அதிபர் வெற்றிடங்கள், 71 ஆசிரிய ஆலோசகர் வெற்றிடங்கள், 7 விடயப் பணிப்பாளர்களுக்கான வெற்றிடங்கள் மற்றும் 122 கல்விசாரா ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டன. | கல்விசார் உத்தியோகத்தர், கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கான பதவி வெற்றிடங்கள் வலய மட்டத்தில் இனங்காணப்பட்டு நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 திசம்பர் 31 ஆம் திகதி வட மேல் மாகாணத்தில் நிலவிய க.பொ.த (சா/தர) பாடங்களுக்குரிய ஆசிரியர் வெற்றிடங்கள் இனங் காணப்பட்டு 2019 ஆம் ஆண்டில் பின்வருமாறு ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டன.<br>மாவட்ட மட்டத்தில் பட்டதாரிகள் 1713<br>கல்வியல் கல்லூரி நியமனம் 238<br>கல்விமானி பட்டதாரிகள் 22<br>இதற்கமைய மொத்தமாக 1973 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. |

### 5.8.3 சுகாதார பதவியணியினர்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சுகாதாரத் திணைக்களத்துக்குரிய 11 வைத்தியசாலைகளில் நிலவிய 17 பதவிகளுக்குரிய 689 உத்தியோகத்தர்கள் 05 வருடத்திற்கு மேற்பட்ட காலமாக இடமாற்றம் பெற்றுக் கொள்ளாது ஒரே வைத்தியசாலையில் சேவையாற்றி வந்தனர். | முறையான இடமாற்ற நடைமுறையொன்று நிறுவப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். | வைத்தியர்களின் இடமாற்றம் வரிசை அமைச்சின் மூலமாக மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறே தாதியர்களின் இடமாற்றக் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தாலும் தாதியர் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பின் காரணமாக அவ்விடமாற்றங்கள் நடைபெறுவதற்குத் தாமதமாகியுள்ளது. ஏனைய பதவிகளுக்கான இடமாற்றக் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தாலும் அந்நிறுவனங்களில் காணப்படும் சேவை அவசியம் காரணமாக, வெற்றிடங்கள் நிரப்பப்படாத காரணத்தினால், அன்றாட நடவடிக்கைகள் தடைபடும் என்ற காரணத்தினால் அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் தாமதமாகியுள்ளன. |
| (ஆ) | குருணாகல் மாவட்டத்தில் காணப்படும் ஆபத்தான 5 வலயங்களில் அமைந்துள்ள சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்கள் காரியாலயங்களில் சிறுநீரக நோய் | ஆபத்தான வலயங்களில் சுகாதார வைத்திய உத்தியோகத்தர்களின் காரியாலயத்திற்கு | வைத்தியர்களை நியமித்தல் மற்றும் இடமாற்றம் செய்தல் என்பன வரிசை சுகாதார |

| | | | |
|---|---|---|---|
| | நிவாரண நடவடிக்கைகளுக்காக ஒரு வைத்தியர் அமைய அடிப்படையில் நியமிக்கப்படாத காரணத்தினால் சுகாதார வைத்திய உத்தியோகத்தர்கள் காரியாலயத்தில் உள்ள வைத்திய உத்தியோகத்தர்கள் நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் சிறுநீரக நோய்க்கான சிகிச்சை நடவடிக்கைகளை மேற்கொள்வதனை சிறந்த விதத்தில் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. 2018 ஆம் ஆண்டில் ஆபத்தான 05 வலயங்களில் நடாத்தப்பட்டிருந்த சிகிச்சை நடவடிக்கைகள் 50 ஆக இருந்ததுடன் இனங்காணப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை 187 ஆகும். | சிறுநீரக நோய் தொடர்பாக பிரத்தியேக வைத்தியர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் பொறுத்தமானதாகும். | அமைச்சினால் மேற்கொள்ளப்படுவதனால் சிறுநீரக நோய் தொடர்பாக பிரத்தியேக வைத்தியர் ஒருவரின் தேவை தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் (பொதுமக்கள் சுகாதாரம் சேவைக்கு )அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | புத்தளம் மாவட்டத்தில் சிறுநீரக நோய் நிவாரண நடவடிக்கைகளை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்காக மாவட்ட சிறுநீரக நோய் நிவாரண அலகிற்காகப் போதியளவு பதவியணியினர் இல்லாத காரணத்தினாலும் சிறுநீரக நோய் விசேட நிபுணர் ஒருவர் புத்தளம் மாவட்டத்திற்கு நியமிக்கப்படாமை என்பன தடைகளாகக் காணப்பட்டன. | போதியளவு பதவியணியினரை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுகாதார சேவைகள் நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தர்களை நியமிப்பதில் அடிக்கடி உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை நிலவுகின்றது. எனினும், காணப்படும் அலுவலக முகாமைத்துவம் காரணமாகப் போதியளவு சுகாதார சேவை ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு எப்போதும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஈ) | குருணாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களின் ஆபத்தான வலயங்களில் அமைந்துள்ள ஆதார மற்றும் ஏனைய வைத்தியசாலைகளில் ஆய்வுகூடங்களில் சிறுநீரக நோய் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொள்வதற்குப் | இரத்த விநியோக செயற்பாடுகளுக்காக வைத்தியசாலைகளுக்குப் போதியளவு பதவியணியினரை பெற்றுக் கொடுக்க | புத்தளம் மற்றும் குருணாகல் மாவட்டங்களில் இரசாயன ஆய்வுகூட பதவியணியினருக்காகக் காணப்பட்ட வெற்றிடங்கள் |

| | | |
|---|---|---|
| போதிய பதவியணியினர் இன்மை மற்றும் இரத்த விநியோக அலகு வினைத்திறனுடன் செயற்படுவதற்குப் போதியளவு பதவியணியினர் இன்மை போன்ற சந்தர்ப்பங்களஅவதானிக்கப்பட்டன. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அது தவிர, மாகாண இரசாயன ஆய்வுகூடமொன்று நிறுவப்பட்டு, தேவையான பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு காணப்பட்ட மனிதவளக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 5.9 பெறுகை

-----------

### வேலை வழங்கலும் சேவைகளும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.9.1 ஏற்பாடுகளுடன பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட 2012 யூலை 23 ஆந் திகதிய பெறுகை கைநூலுக்கான மேலதிக இலக்கம் 25 இற்குரியதாக பெறுகை செயற்பாட்டுக் கூட்டங்களுக்காக கொடுப்பனவிற்கு உரித்துப் பெறுவதற்கு கலந்துரையாடப்படும் விடயங்களுக்கு இணக்கத்தை தெரிவிப்பதற்கு குறைந்தது இரண்டு தடவையாவது அங்கத்தவர்களின் கூட்டம் கட்டாயமானது. மேலும் அவ்வறான கூட்டங்கள் வழமையான வேலைநாட்களில் நடாத்தப்பட வேண்டிய போதும் வடமேல் மாகாண பொறியியலாளர் திணைக்களம் வழமையான வேலை நாட்களில் | பெறுகை வழிகாட்டல்கள் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இது தொடர்பாக உங்களுடன் கலந்துரையாடி மேலதிக தொடர்ந்தும் விடயங்களை தெளிவுபடுத்தியதன் பின்னர் விளக்கங்களை சமர்ப்பிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டமொன்றை நடாத்தி 10 உத்தியோகத்தர்கக்கு ரூபா 1,102,000 தொகை மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2014 யூல 04 ஆந் திகதிய பெறுகை வழகாட்டல் கோவையில் குறிப்பிடப்பட்ட மேலதிக இலக்கம் 28 இன் பிரகாரம் மிகவும் விசேட விடயம் காரணமாக நிர்ணயிக்கப்பட்ட பெறுகை வழிகாட்டல்களுக்கு புறம்பாக தேவையான போது இங்கு குறிப்பிட்ட எல்லைகளுக்கு உட்பட்டு அதற்காக அதிகாரமளிக்கலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அதற்கு காரணங்கள் தெளிவாக எழுத்துமூலம் அறிக்கையிடப்பட வேண்டியதுடன் அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட வேண்டிய போதும் விவசாய அமைச்சினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாமல் ரூபா 6,442,625 தொகை செலவிப்பட்டு மீன்பிடி உபகரணங்கள் பிரதேச வளங்கள் அதிகாரசபையிடமிருந்து மாத்திரம் விலைகோரி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | குறித்த பெறுகை வழிகாட்டியிலிருந்து விலகுவதற்கு தேவையான போது அதற்கு காரணங்கள் தெளிவாக எழுத்துமூலம் அறிக்கையிட வேண்டியதுடன் அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட வேண்டும். | பிரதேச வளங்கள் அபிவிருத்தி அதிகாரசபை அமைச்சுடன் இணைந்த அரச நிறுவனமொன்றாக இருத்தல், போக்குவரத்திற்காக மேலதிக கிரயமொன்று செலவிடுவதற்கு நேராமை, தயாரிக்கப்படும் ஒவ்வொரு மீன்பிடி படகுக்கும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் கடற்படை பொறியியலாளர் உதவியாளரால் தரமானது என்ற தொடர்பாக தேவைப்பாடு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக வழங்கும் சான்றிதழ் வழங்கியமை போன்ற விடயங்களை அடிப்படையாக கொண்டு பிரதேச வளங்கள் அதிகாரசபையிடமிருந்து மாத்திரம் கூறுவிலைகோரி அந்நிறுவனத்திடமிருந்து மீன்பிடி உபகரணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது . |

## 6. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண சபையின் உள்ளக கணக்காய்வுப் பிரிவு நிறுத்தப்பட்டிருந்ததுடன் மாகாண சபையின் அனைத்து நிறுவனங்களுக்காக மீளாய்வாண்டிற்குரிய உள்ளகக் கணக்காய்வொன்று செயற்படுத்தப்படாமை காரணமாக இதிலிருந்து எதிர்பார்த்த நோக்கங்கள் முறையாக நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | மாகாண சபையின் சகல நிறுவனங்களும் உள்ளகக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |

### 6.2. தீர்வுசெய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதான அமைச்சின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்கு செயற்பாடொன்றாக பேணிச் செல்வதற்காக 1993 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த ரூபா 7,038,211 ஆன முற்பணக் கணக்கு தொகையை தீர்வு செய்யாமல் செலவின விடயமொன்றாக மீளாயவாண்டின் இறுதி திகதி வரை முன்கொண்டு வரப்பட்டு காணப்பட்டது. | ரூபா 7,038,211 ஆன முற்பணத் தொகையை தீர்வு செய்வதற்கு அல்லது திறைசேரி கணக்குகளில் காணப்படும் இம்மீதிகளை புத்தகத்திலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | பிரதான செயலாளரால் நியமிக்கப்பட்ட மூன்று உத்தியோகத்தர்களுடன் கூடிய குழுவொன்று மூலம் பரீட்சிக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |